பொது சன நூலகம்
04 APR 2000
மாநகராட்சி
யாழ்ப்பாணம்



# வலம்புரி

விலை ரூபா 5-00

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2031 பங்குனி 22 செவ்வாய்க்கிழமை (04 - 04 - 2000) VALAMPURI ஒலி: 107

★ முகமாலையில் மோதல் தொடர்கிறது

# படையினரின் 2 கவசவாகனங்கள் விடுதலைப்புலிகளால் தாக்கிஅழிப்பு

## படைத்தரப்பு தெரிவிப்பு

முகமாலைப் பகுதியில் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே மூண்ட உக்கிர சண்டையின் போது இராணுவத்தினருக்கு சொந்தமான இரண்டு பவள் கவச வாகனங்கள் விடுதலைப் புலிகளின் ஆர். பி. ஜி, மற்றும் பீரங்கித் தாக்குதலினால் சின்னாபின்னப்படுத்தப்பட்டதாகவும் மேலும் ஒரு கவசவாகனத்தை அழித்து உள்ளதாகவும் பாதுகாப்பு தலைமைச் செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இச்சண்டையின் போது நான்கு இராணுவ அதிகாரிகள் கொல்லப்பட்டதுடன் நான்கு அதிகாரிகளும் 72 படையினரும் காயமடைந்ததாகவும் அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையே இடம்பெற்றுவரும் உக்கிர மோதலையடுத்து முகமாலை மற்றும் பளைப் பகுதிகளில் நிலை கொண்டிருந்த சுமார் 75ற்கு மேற்பட்ட விடுதலைப் புலிகளை சுற்றிவளைத்து இத்தாக்குதல் மேற்கொள்ளப் பட்டதாக பாதுகாப்பு அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

இந்த உக்கிர மோதலின் போது காயமடைந்த இராணுவத்தினர் பலாலி இராணுவ வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு தீவிர

(8 ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தத்தை முடிவிற்கு கொண்டுவர

# அரசு-புலிகள்-ஐ. தே. க. முத்தரப்பு பேச்சு உடன் நடைபெற வேண்டும்

## ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்து

''தற்போது நாட்டில் இடம்பெற்று வரும் உள்நாட்டுப் போருக்கு முடிவு கட்டும்வகையில் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அரசு தமிழீழ விடுதலைப் புலிகளுடனும் ஐக்கிய தேசியக் கட்சியுடனும் பேச்சுக்களை நடத்தி பிரச்சினைக்கு முடிவு கட்ட வேண்டும்'' என்று ஐரோப்பிய (8ஆம் பக்கம் பார்க்க)

# இடம்பெயர்ந்த மக்களுக்கு சமைத்த உணவுகளை உடன் வழங்கவும்

## தென்மராட்சி பிர. செயலர் அரச அதிபருக்கு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

பளை மற்றும் பச்சிலைப் பள்ளி போன்ற இடங்களிலிருந்து இடம் பெயர்ந்தோருக்கு சமைத்த உணவு, மற்றும் ஒரு வாரகால உலர் உணவுகளை வழங்க உடன் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தென்மராட்சி பிரதேசச் செயலர் பு.சுந்தரம்பிள்ளை யாழ். அரச அதிபருக்கு அவசர கோரிக்கை விடுத்துள்ளார்.

சுமார் 922 பேர் இவ்வாறு இடம் பெயர்ந்துள்ளதாகவும் மிருசுவில் சென். நீக்கலஸ் தேவாலயத்தில் 138 பேரும்,

(8 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். மாவட்டத்தில்

# தொண்டர் ஆசிரியர்களாக நியமனம் பெற்றவர்களின் விபரம் வெளியாகின

(திருகோணமலை)

யாழ். மாவட்டத்திலுள்ள அரசாங்கப் பாடசாலைகளில் கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள தொண்டர் ஆசிரியர்களில் பயிலுநர் ஆசிரியர்களாக நியமனம் பெற்றவர்களின் பெயர் விபரங்களைவடக்குக் கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் சுந்தரம் டிவகலாலா

(8 ஆம் பக்கம் பார்க்க)

# தொண்டர் ஆசிரியர் அனைவருக்கும் நிரந்தர நியமனம் கிடைக்கும்

## -டக்ளஸ் தேவானந்தா உறுதி

(ஊர்காவற்றுறை)

தீவகத் தொண்டர் ஆசிரியர்கள் அனைவருக்கும் நியமனம் கிடைக்கும் என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் பொதுச் செயலரும், யாழ். மாவட்ட எம்.பியுமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

ஆசிரியர் நியமனம் கிடைக்காத தொண்டர் ஆசிரியர்

(8 ஆம் பக்கம் பார்க்க)

★ தற்போதைய யுத்தத்தினால்

# இடம்பெயர்ந்தோருக்கு ரூ. 2 ஆயிரம் அமைச்சர் அமுனுகம பணிப்புரை

## டக்ளஸ் முயற்சி பலிதம்

(கொழும்பு)

வடமராட்சி கிழக்கு மற்றும் தென்மராட்சிப் பகுதிகளில் கடந்த ஒரு வார காலமாக இடம் பெற்று வரும் மோதல் சம்பவங்களை அடுத்து ஏற்பட்டுள்ள இடம் பெயர்வினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உடனடி நிவாரணமாக 2000/- வழங்குமாறு வடபிராந்திய புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் கலாநிதி சரத்அமுனுகம யாழ். அரச அதிபரைப் பணித்துள்ளார்.

யுத்த அனர்த்தத்தினால் சின்னாபின்னப்பட்டிருக்கும் வடமராட்சி மற்றும் தென்மராட்சி மக்களின் உடனடித்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# க. பொ. த [சாதாரண] தர பரீட்சை பெறுபேறுகள் இன்று வெளியாகும்?

## கல்வித் திணைக்கள வட்டாரம் தகவல்

கடந்த 1999ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற க.பொ.த (சாதாரண) தர பரீட்சை பெறுபேறுகள் இன்று கொழும்பில் வெளியிடப்படும் என பரீட்சைத் திணைக்கள வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

யாழ்ப்பாணத்திலிருந்து மேற்படி பரீட்சைக்கு தோற்றியோருக்கும் பெறுபேறுகளை விரைவில் அனுப்பி வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமெனவும் அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (சு)

★ உக்ரைன் நிபுணர் குழுவினரின்

# விசாரணை இன்றுமுதல் ஆரம்பம் தலாவைக்கும் விஜயம் செய்வர்

(கொழும்பு)

அனுராதபுரம் தலாவப் பகுதியில் இடம்பெற்ற அன்ரனோவ் 26 விமான விபத்துக் குறித்து விசாரணைகளை மேற்கொள்வதற்கு உக்ரைன் நாட்டு நிபுணர் குழுவினர் நேற்று நண்பகல் கொழும்பு வந்து சேர்ந்தனர்.

உக்ரைன் நாட்டு நிபுணர்

[8ஆம் பக்கம் பார்க்க]

# இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

அரியாலை கண்டிவீதியைச் சேர்ந்த பரஞ்சோதி ஜெயதீபன் (வயது 18) கடந்த சனிக்கிழமையும், அரியாலை செம்மணி வீதியைச் சேர்ந்த பொன்னுத்துரை ரஜீவன் (வயது 24) நேற்று முன்தின

(8 ஆம்பக்கம் பார்க்க)

# "ஆனையிறவுப் போர் ஓயும்வரை படை விலகல் இல்லை என்கிறார் சந்திரிகா"

(புதுடில்லி)

ஆனையிறவில் தற்போது விடுதலைப்புலிகளுக்கும் அரச படையினருக்கும் இடையில் நடைபெற்றுவரும் சண்டை ஓயும்வரை படை விலகல் நடைபெறாது என்று இலங்கை ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா

(8 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# (இராசி பலன்)

04 04.2000
செவ்வாய்க்கிழமை
(தமிழுக்கு பங்குனி - 22)

அமாவாசை இரவு 12.45 வரை, உத்திரட்டாதி காலை 4.04 வரை, அமிர்தயோகம் இராகுகாலம் மாலை 3.40 முதம் 5.11 வரை, சுபநேரம் காலை 11.07 முதல் 12.37 வரை, அமாவாசை விரதம்.

**மேடம்:**
மறைமுக எதிர்ப்பு, கோப வார்த்தை, அலைச்சல்.

**இடபம்:**
மனக்களிப்பு, பணவரவு, வீட்டில் கலகலப்பு.

**மிதுனம்:**
தொழில் முயற்சி, நண்பர் வருகை, விருந்துபசாரம்.

**கடகம்:**
சொற்போர், அயலவர் பகை, அன்னியப்படல்.

**சிங்கம்:**
தடுமாற்றம், வாக்குப் பகை, குழப்பம்.

**கன்னி:**
காதல் சுகம், பெற்றோர் அறிவுரை, உல்லாசம்.

**துலாம்:**
தாயார் உதவி, சயனசுகம், உற்சாகம்.

**விருச்சிகம்:**
தொழில் முடக்கம், பண முடை, அலைச்சல்.

**தனுசு:**
அடிபணிதல், குமுறும் நெஞ்சம், அகால உணவு.

**மகரம்:**
காரியசித்தி, பெண் உதவி, புதிய உறவு.

**கும்பம்:**
குடும்பப்பகை, வேண்டாத செலவு, ஞாபகமறதி.

**மீனம்:**
உயர்ந்தபதவி, நண்பர் பாராட்டு, புதியதகவல்.

(இலங்கை நேரப்படி கணிக்கப்பட்டது)

-அனுஷிபா

## வருடாந்த உற்சவம்

(யாழ்ப்பாணம்)

அரியாலை ஸ்ரீஞானவைரவர் ஆலய வருடாந்த உற்சவம் 06ஆம் திகதி எதிர்வரும் வியாழக்கிழமை ஆரம்பமாகி 21ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை நடைபெறவுள்ளது.

தினசரி காலை முதல் மாலை வரை விசேட அபிடேகம், வசந்தமண்டப பூசை, வைரவப் பெருமான் வீதி உலா வரும் நிகழ்வும் இடம்பெறும். (சு)

## வருடாந்த மஹோற்சவம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு நெழுவினி சித்திவிநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து பத்து தினங்கள் திருவிழா நடைபெற்று சித்திரை புதுவருடப் பிறப்பன்று இரதோற்சவம் இடம் பெறவுள்ளது.

(செ-82)

★ ★ ★

(தென்மராட்சி)

கொல்லங்கிராய்ஸ்ரீவீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து பத்து தினங்கள் திருவிழா நடைபெற்று சித்திரை புதுவருடப் பிறப்பன்று இரதோற்சவம் இடம் பெறவுள்ளது.

(செ-77)

# பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

யாழ். குடாநாட்டிலிருந்து வெளியிடங்களிற்கு இம்மாதம் 03 ஆம் திகதிவரை பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவுஇலக்கங்கள் பிரதேச செயலர் ரீதியாகத் தரப்படுகின்றது.

**சங்கானை**

| | |
|---|---|
| 130722 ஏ | 130726 ஏ |
| 131746 ஏ | 131765 ஏ |
| 135522 ஏ | 138159 ஏ |
| 138217 ஏ | 138217 பி |
| 138315 ஏ | 138317 ஏ |
| 138387 ஏ | 138419 ஏ |
| 138422 ஏ | 137467 ஏ |
| 138508 ஏ | 138508 பி |
| 138508 சி | 138529 ஏ |
| 138529 பி | 138572 ஏ |
| 138572 பி | 139656 ஏ |
| 139689 ஏ | 139692 ஏ |
| 139769 ஏ | 139769 பி |
| 139769 சி | |

**யாழ்ப்பாணம்**

136090 ஏ.

**கோப்பாய்**

| | |
|---|---|
| 134172 ஏ | 134172 பி |
| 135989 ஏ | 135989 பி |
| 135989 சி | 139235 ஏ |
| 136244 ஏ | 136253 ஏ |
| 136253 பி | 136253 சி |
| 136254 ஏ | 136265 ஏ |
| 126265 பி | 136282 ஏ |
| 136400 ஏ | 136400 பி |
| 136409 ஏ | 136409 பி |
| 136409 சி | 136426 ஏ |
| 136432 ஏ | 136443 ஏ |
| 136443 பி | 136444 ஏ |
| 136446 ஏ | 136447 ஏ |
| 136467 ஏ | 136470 ஏ |
| 136485 ஏ | 136485 பி |
| 136487 ஏ | 136491 ஏ |
| 136491 பி | 136505 ஏ |
| 136516 ஏ | 136525 ஏ |
| 136554 ஏ | 136554 பி |
| 136555 ஏ | 136555 பி |
| 136555 சி | 136601 ஏ |
| 136601 பி | 136601 சி |
| 136601 டி | 136601 ஈ |
| 136602 ஏ | 136602 பி |
| 136604 ஏ | 136605 ஏ |
| 136618 ஏ | 136618 பி |
| 136620 ஏ | 136620 பி |
| 136621 ஏ | 136627 ஏ |
| 136641 ஏ | 136641 பி |
| 136641 சி | 136641 டி |
| 136642 ஏ | 136642 பி |
| 136642 சி | 136642 டி |
| 136642 ஈ | 136649 ஏ |
| 126649 பி | 136650 ஏ |
| 139454 ஏ | 139454 பி |
| 139463 ஏ | 139467 ஏ |
| 139475 ஏ | 139476 ஏ |
| 139476 பி | 139476 சி |
| 139477 ஏ | 139834 ஏ |
| 139835 ஏ | 139839 ஏ |
| 139842 ஏ | 139847 ஏ |
| 139852 ஏ | |
| 139852 பி | 139862 ஏ |
| 139862 பி | 139867 ஏ |
| 139867 பி | 139887 ஏ |
| 139887 பி | 139890 ஏ |
| 139895 ஏ | 139895 பி |
| 139895 சி | 139895 டி |
| 139899 ஏ | 139899 பி |
| 139899 சி | |

**நல்லூர்**

| | |
|---|---|
| 128331 ஏ | 128338 ஏ |
| 128338 பி | 133125 ஏ |
| 133125 பி | 136046 ஏ |
| 136171 ஏ | 136190 ஏ |
| 136733 ஏ | 136733 பி |
| 136743 ஏ | 136750 ஏ |
| 136750 பி | 139474 ஏ |
| 139858 ஏ | 139863 ஏ |
| 139863 பி | 135552 ஏ |
| 135552 பி | 135552 சி |
| 135731 ஏ | 138101 ஏ |
| 138178 ஏ | 138178 பி |
| 138505 ஏ | 138531 ஏ |
| 138531 பி | 138532 ஏ |
| 138533 ஏ | 138533 பி |
| 138541 ஏ | 138576 ஏ |
| 138578 ஏ | 139537 ஏ |
| 139545 ஏ | 139545 பி |
| 139608 ஏ | 139608 பி |
| 139640 ஏ | 139640 பி |
| 139662 ஏ | 139662 பி |
| 139663 ஏ | 139663 பி |
| 139663 சி | 139663 டி |
| 139701 ஏ | 141416 ஏ |

**சண்டிலிப்பாய்**

| | |
|---|---|
| 129103 ஏ | 129103 பி |
| 129104 ஏ | 132617 ஏ |
| 130617 பி | 130617 சி |
| 130748 ஏ | 130791 ஏ |
| 139792 ஏ | 130792 பி |
| 131584 ஏ | 131584 பி |
| 131772 ஏ | 131838 ஏ |
| 131838 பி | 131878 ஏ |
| 131878 பி | 135556 ஏ |
| 135728 ஏ | 135728 பி |
| 135974 ஏ | 138108 ஏ |
| 138108 பி | 138117 ஏ |
| 138117 பி | 138206 ஏ |
| 138262 ஏ | 138262 பி |
| 138262 சி | |
| 138262 டி | 138262 ஈ |
| 138282 ஏ | 138308 ஏ |
| 138351 ஏ | 138351 பி |
| 138361 ஏ | 138379 ஏ |
| 138379 பி | 138379 சி |
| 138380 ஏ | 138396 ஏ |
| 138397 ஏ | 138397 பி |
| 138409 ஏ | 138430 ஏ |
| 138430 பி | 138430 சி |
| 138455 ஏ | 138455 பி |
| 138455 சி | 138455 டி |
| 138470 ஏ | 128470 பி |
| 138470 சி | 138515 ஏ |
| 138560 ஏ | 139573 ஏ |
| 139613 ஏ | 139613 பி |
| 139613 சி | 139634 ஏ |
| 139725 ஏ | 139735 ஏ |
| 139815 ஏ | |

**தெல்லிப்பழை**

| | |
|---|---|
| 136393 ஏ | 129206 ஏ |
| 131840 ஏ | 131840 பி |
| 131877 ஏ | 131877 பி |
| 134408 ஏ | 135613 ஏ |
| 135699 ஏ | 135865 ஏ |
| 138127 ஏ | 138152 ஏ |
| 138283 ஏ | 138554 ஏ |
| 141303 ஏ | 141424 ஏ |

**உடுவில்**

| | |
|---|---|
| 123946 ஏ | 134132 ஏ |
| 134253 ஏ | 134269 ஏ |
| 136236 ஏ | 136331 ஏ |
| 139331 பி | 136333 ஏ |
| 136337 ஏ | 136337 பி |
| 136347 ஏ | 136362 ஏ |
| 136368 ஏ | 136377 ஏ |
| 136377 பி | 139465 ஏ |
| 129170 ஏ | 130578 ஏ |
| 130578 பி | 130635 பி |
| 130785 ஏ | 130785 பி |
| 131824 ஏ | 135584 ஏ |
| 135591 ஏ | 135601 ஏ |
| 135601 பி | 135601 சி |
| 135657 ஏ | 135658 ஏ |
| 135826 ஏ | 135826 பி |
| 135915 ஏ | 135951 ஏ |
| 138183 ஏ | 138221 ஏ |
| 138250 ஏ | 138250 பி |
| 138250 சி | 138297 ஏ |
| 138298 ஏ | 138299 ஏ |
| 138310 ஏ | 138310 பி |
| 138316 ஏ | 138316 பி |
| 138332 ஏ | 138332 பி |
| 138355 ஏ | 138355 பி |
| 138386 ஏ | 138398 ஏ |
| 138442 ஏ | 138471 ஏ |
| 138513 ஏ | 138530 ஏ |
| 138564 ஏ | 139531 ஏ |
| 139532 ஏ | 139627 ஏ |
| 139635 ஏ | 139679 ஏ |
| 139813 ஏ | 141196 ஏ |
| 141196 பி | 141402 ஏ |

# "தொண்டர் ஆசிரியர்களுக்கு அரசு நிரந்தர நியமனம் வழங்க வேண்டும்"

## ஈ. பி. ஆர். எல். எவ். கோரிக்கை

''தொண்டராசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க அரசு முன்வர வேண்டும்'' என்று வலியுறுத்தி ஈ.பி.ஆர்.எல்.எவ். அறிக்கை ஒன்றினை நேற்று வெளியிட்டுள்ளது.

இஉவிடயம் தொடர்பாகத் தாம் ஜனாதிபதிக்கும் சம்மந்தப்பட்ட அமைச்சர்ளுக்குமகஜர்களையும்அனுப்பி வைத்துள்ளது.

மேற்படி அமைப்பின் வவுனியா மாவட்ட தலைமையகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; வவுனியா மாவட்டத்தில் அரசாங்க பாடசாலையில் கடமையாற்றும் 320ற்கும் மேற்பட்ட தொண்டர் ஆசிரியர்கள் கடந்த 01.04.2000 தொடக்கம் நிரந்தர நியமனம் கோரி வவுனியர் மாவட்டத்திலே தொடர்ச்சியான அடையாள உண்ணாவிரதத்தை மேற்கொண்டு வருகின்றார்கள்.

இவர்கள் கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக யுத்தப் பிரதேசங்களிலே சேவையாற்றி வந்தவர்கள். நாட்டில் நிலவும் யுத்த சூழ்நிலை ஒன்றின் கீழ் சொல்லொணாத் துன்பங்களையும் தினம்தினம்சந்தித்து சோர்ந்து போயுள்ள மக்களுக்கு தங்களின் பிள்ளைகளுக்கு சீரான கல்வியைக் கொடுக்க முடியாமல் இருக்கிற நிலைமையில் தொண்டர் ஆசிரியர்கள் எதிர்காலச் சந்ததியினருக்கு வழங்கிவரும் கல்விச் சேவையினை நாம் மதிக்க வேண்டியுள்ளது. தொண்டராசிரியர்கள் தங்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி பல தடவை ஜனநாயக வழி முறையில் போராட்டங்கள் நடாத்தித் தமது கோரிக்கைகளை முன் வைத்த போதும் அவர்களுக்கு வாக்குறுதிகள் வழங்கப்பட்டதே தவிர ஆசிரிய நியமனம் வழங்கப்படவில்லை.

இதன் காரணமாகவே தொண்டர் ஆசிரியர்கள் வடகிழக்குப் பகுதி எங்கும் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை நடாத்த முன்வந்துள்ளார்கள். இந்த நியாயமான கோரிக்கையை சம்மந்தப்பட்ட அதிகாரிகளும் அரசும் மேலான கவனத்திற்கு எடுத்து அவர்களுக்கு தகுதி அடிப்படையில் நியமனம் வழங்க வேண்டுமென கோரி வவுனியா மாவட்ட ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பினர் ஆகியநாங்கள் இவர்களுடன் இணைந்து உண்ணாவிரதத்தில் தொடர்ச்சியாகப் பங்களித்து வருகிறோம்.

இவர்களின் போராட்டம் வெற்றி பெறும் வரை எமது பூரண ஒத்துழைப்பை வழங்குவதோடு இவ்விடயம் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க அவர்களுக்கும் சம்பந்தப்பட்ட அமைச்சர்களுக்கும் மகஜர்களை அனுப்பி வைத்துள்ளோம். (சி)

### வறுமையின் பிடியில் சிக்கியதால்

# ஒன்றரை வயது மகளை விற்க முயன்ற தந்தை கைதானார்

(காலி)

களுத்துறை நகரில் தனது ஒன்றரை வயதுப்பெண் குழந்தையை விற்பனை செய்ய முயன்ற தந்தை ஒருவரைப் பொலிசார் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர், அவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

வறுமை காரணமாகத் தான் தன் மகளை விற்க முயன்றதாக விசாரணையின் போது பிரஸ்தாப தந்தை தெரிவித்ததாகப் பொலிசார் கூறினர். (சி)

# ஜுன் முதல் பதில் கணக்காளர்கள் நியமனங்கள் வழங்கப்படுமென அறிவிப்பு

(திருகோணமலை)

வடக்கு- கிழக்கு மாகாண பொது சேவை ஆணைக்குழுவினால் தெரிவு செய்யப்பட்டுள்ள பதில் கணக்காளர்க்கான நியமனங்கள் எதிர்வரும் ஜுன் மாதம் முதல் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தவகையில் 30 பேர் பதில்கணக்காளர்களாக மாகாண நிர்வாகத்தின் கீழ் பணியாற்றத் தெரிவாகியுள்ளனர். [சி]

## 'புலிகள் இராணுவ முகாம் மீது ஷெல் வீச்சு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு புதூர் இராணுவ முகாமைநோக்கிநேற்று முன்தினம் விடுதலைப் புலிகளினால் ஏவப்பட்ட இரண்டு ஷெல்கள் வீழ்ந்து வெடித்தாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவம் தொடர்பாக இராணுவத்தினர் எவருக்கும் காயம் ஏற்படவில்லை என பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன (சி)

## வருடாந்த மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அத்தியடி ஸ்ரீசிதம்பர நடராஜ வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் நாளை புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

12ஆம் திகதி மாலை 5 00 மணிககு சப்பறத்திருவிழாவும், 13ஆம் திகதி காலை 9 மணிக்கு தேர் உற்சவமும் 14ஆம்திகதி காலை9 மணிக்கு தீர்த்த உற்சவமும், 15ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5.00மணிக்கு வசந்தோற்சவமும் இடம் பெறும்.

நாளை 5ஆம் திகதி முதல் 13ஆம் திகதி வரை ''செஞ்சொற் செல்வர்'' இரா. செல்வவடிவேல் தெய்வீகப் பேருரை நிகழ்த்துவார். (சு)

# வன்னி மக்கள் பிரச்சினை குறித்து இராணுவ அதிகாரிகளுக்கு விளக்கம்

(வவுனியா)

வன்னி மாவட்ட மக்கள். எதிர்நோக்கும் பிரச்சினைகள், தேவைகள் குறித்து வன்னி மாவட்ட அரசாங்க அதிபர்கள் இராணுவ உயர் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தினர்.

வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் கே. கணேஷ் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் எஸ். சுந்தரம், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ஏ.ஐயாத்துரை ஆகியோர் மேற்படி உயர் அதிகாரிகளை வவுனியா கட்டளைத் தலைமையகத்தில் சந்தித்து உரையாடினர்.

வன்னியிலும் வவுனியாவிலும் மக்கள் அன்றாடம் எதிர் நோக்கும் பிரச்சினைகள் அவர்களால் அவ் வேளை இராணுவ உயரதிகாரிகளின் கவனத்திற்குக்கொண்டு வரப்பட்டது எனத்தெரிவிக்கப்பட்டது.

இராணுவத் தரப்பில் 213 ஆவது படையணியின்தளபதி பிரிகேடியர் சுனில் தென்னக்கோன், சிவில் நிர்வாகத்திற்குப் பொறுப்பான பிரிகேடியர் பியசோம, பிரிகேடியர் திஸ்ஸ ஜெயவர்த்தன ஆகியோர் இதில் கலந்து கொண்டனர். (சி)

# வடமராட்சிப் பகுதியில் தடையுத்தரவு

## கடற்றொழிலாளர் பெரிதும்பாதிப்பு

(அச்சுவேலி)

தொண்டமானறு கடல் நீர் ஏரியுடன் தொடர்புடையதாக அச்சுவேலியின் வடபுறஎல்லையை அண்டியுள்ள வல்லை, பான்பாய்ஞ்சான், உப்புக்சழி போன்ற கடற் பகுதிகளில் தற்போதைய யுத்தச்சூழ்நிலை காரணமாக கடற்றொழிலாளர்கள் தொழிலில் ஈடுபடுவது மறு அறிவித்தல்வரை ஓர் குறிப்பிட்ட காலப்பகுதிக்கு படையினரால் தடைசெய்யப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை தடை உத்தரவு திடீரென பிறப்பிக்கப்பட்டதனால் இதற்கு முன்னய தினத்தில் படுக்கை வலை மற்றும் விரிப்புவலையினைக் கடலில் இட்டவர்கள் தமது மீன்பிடி உபகரணங்களைக் கடலில்இருந்து எடுக்க முடியாது போகவே அச்சுவேலியில் உள்ள ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினர் இராணுவத்தினருடன் தொடர்புகொண்டு மீனவர்களின் நிலைமையை விளக்கியபின்னர் அவர்களது மீன்பிடிஉபகரணங்கள் கடலில் இருந்து ஒருசில மணிநேரத்திற்குள் எடுத்துவருவதற்கு மட்டும் அனுமதி வழங்கப்படடிருந்தது.

இத்தடை நடவடிக்கையில் வலைவீசி மீன்பிடிக்கும், மறிப்புவேலிகள் அமைத்து மீன்பிடிக்கும்; அச்சுவேலி, ஆவரங்கால், புத்தூர் பகுதிகளைச் சேர்ந்த கடல்தொழிலாளர்கள் வேறுதொழில்கள் ஏதுமின்றி பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

இதேவேளை பருத்தித்துறை வல்லை பகுதிகளில் மீன்பிடி நடவடிக்கைகள் தடைசெய்யப்பட்டிருப்பதனால் தொடர்ந்து சிலதினங்களாக குடாநாட்டின் அநேக பகுதிகளில் மீனிற்குப் பெரும் தட்டுப்பாடு நிலவிவருவதுடன் திடீர் விலையேற்றமும் ஏற்பட்டுள்ளது. (14-சி)

## புதிய நடைமுறை

[யாழ்ப்பாணம்]

புதிதாக தொலைபேசி இணைப்புப் பெறுவதற்கு விண்ணப்பிப்போர் இதுவரை காலமும் அதற்கான விண்ணப்பக் கட்டணமாக 298 ரூபா செலுத்த வேண்டியிருந்தது.

தற்போது ஏப்ரல் முதலாம் திகதி தொடக்கம் குறிப்பிட்ட படிவத்தில் மேலதிகமாக நூறு ரூபா முத்திரையும் ஒட்டப்படவேண்டும் என்ற புதிய நடைமுறையை ரெலிகொம் நிறுவன வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. [சி]

# இணுவில் பகுதியில் சைக்கிள் திருட்டு அதிகரிப்பு, சூத்திரதாரிகள் யார்?

(இணுவில்)

இணுவில் கந்தசுவாமி கோயில் இளம் தொண்டர் சபையில் கல்வி பயிலும் மாணவர் ஒருவரின் துவிச்சக்கரவண்டி திருட்டுப் போய் உள்ளது.

மேலும் சங்கானையில் இருந்து இங்கு மிருதங்கம் பயில வரும் க. கோபிநாத் என்ற மாணவனின் துவிச்சக்கரவண்டி சைவப் பணிமனைக்கு முன்பாக நிறுத்தப்பட்டிருந்த போது களவாடப்பட்டுள்ளது.

அண்மைக் காலமாக இப்பகுதியில் அதிகாலை வேளையில் கோயிலுக்கு வருவோரின் துவிச்சக்கரவண்டிகளும் திருட்டுப் போய் விடுகின்றன.

இதே வேளை கோவில் மண்டபத்தில் அரட்டை அடிக்கும் ஒரு கும்பலின் செயற்பாடு குறித்தும் பொதுமக்கள் அதிருப்தி தெரிவிக்கின்றனர். (சி-49)

# பண்ணாகம் வீதி சீரமைப்புக்கு பி.ச. தலைவர் உடன் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

நீண்டகாலமாக குன்றும் குழியுமாக போக்குவரத்துக்குப்பெரும் அசௌகரியமாக இருந்துவந்த மூன்று மைல் நீளம்கொண்ட பண்ணாகம் வீதி தற்போது சீரமைக்கப்பட்டு வருகிறது.

மக்களின் வேண்டுகோளின் பேரில் வட்டுக்கோட்டைத் தொகுதி ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி அமைப்பாளரும் வலிமேற்குப் பிரதேசசபை தலைவருமான திரு. என். திரிலோகநாதன் இதுவிடயத்தில் உடன் நடவடிக்கை எடுத்தார்.

தொழிநுட்பவியலாளர் கே. வரதராசன், செல்வி. எம். ஜனனி ஆகியோரும் இப்பணிக்கு உதவுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (சி)

# யாழ்நகர் கடைகளில் பரவலாக காலங்கடந்தபுட்டிப்பால் விற்பனை

(ஈச்சமோட்டை)

யாழ்ப்பாணக் கடைகளில் பரவலாக காலம்கடந்த புட்டிப்பால் விற்பனை செய்யப்பட்டுவருவதாக மக்கள் புகார் தெரிவிக்கிறார்கள்.

இப்புட்டிப்பால்கள் மார்ச் 31 2000 எனக் குறிக்கப்பட்டுள்ளபோதும் அதைக் கவனிக்காது வாங்கும் நுகர்வோர் ஏமாற்றம் அடைகின்றனர்.

அத்துடன் சிலகடைகளில் காலாவதித் திகதியை சுரண்டிவிட்டு இவை விற்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதை யாழ். மாநகரசபை உணவுப் பரிசோதனைப்பிரிவு சோதனையிட்டு கைப்பற்றி அழிக்குமாயின் மக்கள் பெரும் நன்மையடைவார்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (59-சி)

## தீவக வலய

# பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற உடற்பயிற்சிப் போட்டி முடிவுகள்

(ஊர்காவற்றுறை)

தீவக வலயப் பாடசாலைகளுக்கு இடையில் நடைபெற்ற உடற்பயிற்சிப் போட்டியில்; ஊர்காவற்றுறை, வேலணை, நெடுந்தீவு கல்விக் கோட்டங்களில் முதல் 3 இடங்களைப் பெற்ற அணிகளுக்கிடையில் நடைபெற்ற போட்டியில் வெற்றியீட்டிய பாடசாலை விபரம் வருமாறு.

**ஆண்கள் அணி**

★ 1-ஆம் இடம் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி.

★ 2-ஆம் இடம் நாரந்தனை றோமன் கந்தோலிக்கப் பாடசாலை.

★ 3-ஆம் இடம் வேலணை மேற்கு நடராஜா வித்தியாலயம்.

**பெண்கள் அணி**

★ 1-ஆம் இடம் ஊர்காவற்றுறை சிறிய புஷ்ப மகளிர் வித்தியாலயம்.

★ 2-ஆம் இடம் நாரந்தனை றோமன்கத்தோலிக்கப் பாடசாலை.

★ 3-ஆம் இடம் வேலணை சேர் வைத்தியலிங்கம் துரைசுவாமி ம. வி.

இவ்வணிகளில் 1-ஆம், 2-ஆம் இடங்களைப் பெற்ற அணிகள் யாழ். மாவட்ட மட்டப் போட்டிகளில் கலந்துகொள்ளவுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது. (செ-75)

## கார்ட்மூலமான தொலைபேசி அழைப்பு

(யாழ்ப்பாணம்)

கார்ட் செலுத்தி தொலைபேசி தொடர்பு எடுப்பது தொடர்பாக ரெலிகொம் பிராந்திய நிறுவனம் விளக்கம் ஒன்றினைத் தெரிவித்துள்ளது.

மேற்படி கார்ட்டை யாழ்ப்பாண ரெலிகொம் நிறுவன கட்டணங்கள் செலுத்தும் பிரிவில் பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

# மீள மின்னிணைப்பு பெறுவதில் ஏற்பட்டுள்ள தடங்கல் நிலை

(அச்சுவேலி)

பழைய மின்பாவனையாளர்களுக்கு மீள மின்னிணைப்பு வழங்குவதற்கு வேண்டிய மின்னிணைப்பு வயர்கள் சுன்னாகம் மின்சார சபை களஞ்சியத்தின் கையிருப்பில் இல்லையென மின்சாரசபை அதிகாரிகள் தெரிவித்துள்ளதை அடுத்து சுன்னாகம் மின்சாரசபைக்கு உட்பட்ட மீள மின்னிணைப்பு பெறும் மின் பாவனையாளர்கள் தமக்கு வேண்டிய மின்னிணைப்பு வயர்ளை தாமே பெற்று மீண்டும் மின்னிணைப்பு பெற்றுவருகின்றனர்.

இவ்வாறு மின்னிணைப்பு வயர்களைப் பெற்றுக் கொடுத்து மின்னிணைப்பினைப் பெற்றுக் கொள்வதற்காக அதிகளவுப் பணத்தினைச்செலவு செய்ய வேண்டிய நிலை உள்ளதால் அனேகமான பழைய மின் பாவனையாளர்கள் கொழும்பிலிருந்து இதற்குத் தேவையான மின்னிணைப்பு வயர்கள் வரும் வரை இதற்கு வேண்டிய கட்டுப்பணம் அனைத்தும் கட்டிய நிலையிலும் நீண்ட காலமாகக் காத்திருக்க வேண்டியதாக உள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (14-சி)

# ஆன்மீகத்தைக் கடைப்பிடித்தாலே சமாதான வாழ்க்கை மலரும்

## நாச்சியார் செல்வநாயகம் உரை

(யாழ்ப்பாணம்)

''உலகில் ஒப்பற்ற செல்வம் ஆன்மீகச் செல்வமே. இதனை யோகர் சுவாமிகள் தனது போதனைகளூடாக சாதனைகளாக்க, எமக்கு வழிகாட்டியிருக்கிறார். நாமும் வாழ்வில் ஆன்மீகத்தை கடைப்பிடித்து வளம் பெறவேண்டும். இத்ன்மூலம் நாட்டில் சண்டை சச்சரவுகளற்ற சமாதான வாழ்வு பிறக்கும். எல்லோரும் இன்ப அன்பு வாழ்க்கை வாழலாம்.

அண்மையில் கொழும்புத்துறை இந்துமகாவித்தியாலயத்தில் இடம்பெற்ற யோகர் சுவாமிகளின் 36 வது குருபூசைதின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிக்துறை முதுநிலை விரிவுரையாளர் நாச்சியார் செல்வநாயகம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலய இந்துமாமன்றத் தலைவர் என். தயாளன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், யோகர் சுவாமிகள் மானுட உருவெடுத்த மகாத்மா. ''யாம் ஒன்றும் அறியோம்'' என அவர் வாயிலின்றும் அடிக்கடி உதிரும் முத்துக்கள் அறியாத பல விடயங்களை நமக்கு அறிவுறுத்தி நிற்கிறது.

செல்லப்பா சுவாமிகளின் சொற்பணிந்து யோகர் சுவாமிகள் ஞானம் பெற்றார்.

இவர் காட்டிய அன்புவழி நடந்தால் நாமும் நித்திய பேரின்பம் அடையலாம்.

சாதி, சமயம் பேசுகின்றவர்கள் உள்ளத்தில் அன்பில்லாதவர்கள். மனிதப்பிறப்பில் மாறுபாடு காண்பவர் மனங்களில் இறைவன் மலரமாட்டான்.

அவர்கள் இறைவழிபாடு இயற்றுவது பயனற்றது. எந்நாளும் அவர்களுக்காய் இறைவன் இரங்கமாட்டான்.

இதைத்தான் யோகர் சுவாமிகள் தனது அமைதியான பார்வையால் எடுத்தியம்பி நிற்கிறார்.

அன்பாலே அகிலத்தை ஆழலாம் என்பதனை அகிலமறிய வைத்த யோகர் சுவாமிகள் பிறந்ததால் இந்த யாழ் மண்ணே புகழ் பெறுகிறது. அவர் பிறந்த மண்ணில் வாழும் நாமும் புகழ்பெற வேண்டும்.

அதற்கு மிகவும் சுலபமான, அருமையான வழி ஒன்றுண்டென்றால் அது அன்புதான். இதைத்தான் யோகர் சுவாமிகளும் எமக்கு வலியுறுத்திச் சென்றுள்ளார் என்று குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் மாநகரசபை ஆணையாளர் வே.பொ.பாலசிங்கம், பாடசாலை அதிபர் திருமதி. சிவபாலன் ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றினர். (உ-சி)

## கோரிக்கை

(அரியாலை)

யாழ். கனகரத்தினம் மத்தியமகாவித்தியாலயத்தில் இரண்டாவது தடவையாக இம்முறை நடைபெறும் க. பொ. த (உ/த) பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களை ளவசதிக்கட்டணத்துடன் உடன் சமுகமளிக்கும்படி அதிபர் கேட்டுக்கொண்டுள்ளார், (சி-106)

## மும்முரமான விற்பனை

(அரியாலை)

எதிர்வரும் தமிழ் - சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு யாழ்நகரிலுள்ள புடவை மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் விற்பனை அதிகரித்துள்ளது காலை முதல் மாலை வரை நகரில் சனக்கூட்டம் நிரம்பிவழிகிறது. (சி-106)

## மகோற்சவம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் மேற்கு ஸ்ரீ வராகி அம்மன் கோயில் மஹோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி புதுவருஷத்தன்று தேர்த்திருவிழாவும் அடுத்தநாள் தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும்.

தினமும் மாலை 4.30 மணி தொடக்கம் கானகதாவாரிதி பிரம்மஸ்ரீ சிவ.வை. நித்தியானந்த சர்மா மகாபாரதம் பற்றித் தொடர் சொற்பொழிவாற்றுவார். (சி)


**புத்தாண்டுக்கான மலிவு விற்பனை**

விஷேட தள்ளுபடியுடனான விற்றுத் தீர்த்தல்.

இல. 06 கஸ்தூரியார் வீதியில்

அமைந்துள்ள எமது மலிவு விற்பனை நிலையத்தில் விஷேட தள்ளுபடியுடன் சகல பொருட்களையும் பெற்றுக் கொள்ள முந்திக் கொள்ளுங்கள்.

**மோகனம் ரெக்ரைல்ஸ்**

இல. 06 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

நிரந்தர முகவரி
இல. 41 நவீன சந்தை, (உட்புறம்) யாழ்ப்பாணம்.

(கி/155)

## சர்வதேச விமானங்களில் தமிழ் பி.எச். அப்துல் ஹமீட்டின் குரலில்

(சென்னை)

சர்வதேச பயணிகள் விமானங்களில் பயணிகளுக்கு தமிழில் அறிவிப்பவர் அன்பு அறிவிப்பாளர் பி.எச்.அப்துல் ஹமிட் என்று தெரிய வருகிறது.

பல சர்வதேச விமானக்கம்பனிகள் இவரின் குரலில் பதிவு செய்யப்பட்ட அறிவிப்புகளையே பயணிகளுக்குஒலிபரப்புவதாகச் சொல்லப்படுகிறது.

இந்திய சண் தொலைக்காட்சியிலும் இலங்கை சர்வதேச வானொலியிலும் தமிழில் புகழ் பரப்புபவர் என்று சொல்லப்படுகிறது. (து)

## மரண பயம் கலந்த எயிட்ஸ் வாழ்வு ஆய்வின் மூலம் தற்காலிக நிவாரணம்

(லண்டன்)

எயிட்ஸ்நோய் நிவாரணியாக 4 ஆண்டுகளுக்குமுன் அறிமுகப்படுத்தப்பட்ட மருந்துத்தொகுப் பொன்று நோயாளிகளின் ஆயுட்காலத்தை எதிர்பாராத அளவுக்கு அதிகரித்துள்ளது.

10 ஐரோப்பிய நாடுகள் ஒன்றிணைந்து மேற்கொண்ட இவ் ஆய்வின் முடிவானது எயிட்ஸ் நோயாளிகளின் மரணபயம் கலந்த வாழ்வுக்கு தற்காலிகமானதோர் தீர்வினை ஏற்படுத்தி இருப்பதுகுறித்து பாதிக்கப்பட்டவர்கள் தரப்பில் திருப்தி தெரிவிக்கப்பட்டுள்ளது.

எச்.ஐ.வி. நோய் நுண்கிருமி தாக்கியபின் 10 ஆண்டுகளுக்குள் உயிரிழக்கும் அபாயத்தை இம்மருந்து 64 வீதம் குறைத்துவிட்டதாக ஆய்வு அறிக்கை தெரிவிக்கிறது.

இருப்பினும் மேற்படி சிகிச்சை நோயை குணப்படுத்தாது நோய்க்கிருமிகளை மட்டுமே கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் தன்மை கொண்டது.

அத்துடன் பக்க விளைவுகள் ஏதுமற்ற இச்சிகிச்சைக்கு அதிக செலவாகலாம் என எதிர்பார்க்கப்படுவதால் ஏழைநாடுகளில் இதன் பயன் எட்டுவதற்கு நியாயமில்லை எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (சி-உ)

## கந்தகம் குறைந்த கச்சா எண்ணெய் இறக்குமதிக்கு இருநாடுகள் ஒப்பந்தம்

(புதுடில்லி)

குறைந்த கந்தகக் கலப்புக்கள் உள்ள கச்சாய் எண்ணெயை இந்தியா இறக்குமதி செய்யும் என்று சொல்லப்படுகிறது.

நைஜீரியாவும் இந்தியாவும் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் படி கந்தகக் கலப்புக் குறைந்த கச்சாய் எண்ணெய் இறக்குமதி செய்யப்படும்.

வருடா வருடம் 60 இலட்சம் லீற்றர் கச்சாய் எண்ணெய் இறக்குமதி செய்யப்படுமென்று தெரிய வருகிறது.

இந்த ஒப்பந்தத்தையடுத்து வாகனங்கள் குறைந்த கந்தகக் கலவைப் பெற்றோலைப்பயன்படுத்தத் தொடங்கவிருக்கின்றன என்று செய்திகள் கூறுகின்றன.

இதேவேளை 8 வருட பாவனையிலுள்ள வாகனங்களை வீதியில் ஓட விடுவதை நீதிமன்றம் தடுத்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

நகர்களின் வீதிகள் மாசடைவது இந்த ஏற்பாடுகள் மூலம் நிறைவேறும் என்று நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன. (து)

## எந்த நேரமும் பேசத் தயார் இந்தியாவிற்கு பாகிஸ்தான் அழைப்பு

(புறூணே)

எந்த நேரமும் எந்த நிலையிலும் எம்மட்டத்தினருடனும் இந்தியாவுடன் பேச்சுவார்த்தை நடத்த பாகிஸ்தான் தயார் நிலையில் இருக்கிறதென்று ஜெனரல் முஷாரப் தெரிவித்தார்.

தென்கிழக்கு நாடுகளுக்கு விஜயத்தை மேற்கொண்ட முஷாரப் புறூணே நாட்டில் சுல்தான் அவர்களைச் சந்தித்த போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நேற்று முன்தினம் இந்தோனேசியா சென்று திரும்புகையில் புறூணே நாட்டுத் தலைவரைச்சந்தித்த பின் பத்திரிகையாளர்களுக்கு உரை நிகழ்த்துகையில்:

கிளின்டனின் வரவுபற்றி நினைவூட்டி அண்டை நாடான இந்தியாவுடன் காஷ்மீர் பிரச்சினையைப் பேசித் தீர்த்துக் கொள்ள விரும்புவதாகவும் எந்த நேரமும் இந்தியாவின் பதிலுக்காகக் காத்திருப்பதாகவும் குறிப்பிட்டார். (து)

## தேசிய ஆணையம் கலைக்கப்படும் வரை காங்கிரஸ் கட்சி ஓயமாட்டாது

### மகாராஷ்டிர முதல்வர் சூளுரை

[புதுடில்லி]

அரசமைப்புச் சட்டத்தை மறு ஆய்வு செய்யும் நடவடிக்கையை மத்திய அரசு கைவிட்டு அதற்காக அமைக்கப்பட்ட தேசிய ஆணையத்தைக்கலைக்கும் வரையில் காங்கிரஸ் கட்சி ஓயாது என்றுமகாராஷ்டிர முதல்வர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கட்சியின் தொண்டர்களுக்கான கூட்டம் ஒன்றிலேயே மேற்படி கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அரசமைப்புச் சட்ட மறு ஆய்வினை எதிர்த்து நாடு தழுவிய போராட்டம் ஒன்றினை இம்மாதம் 14-ஆம் திகதி நடாத்துவதற்கான முன்னேற்பாடுகள் பற்றிய முடிவுகளும் இக்கூட்டத்தில் எடுக்கப்பட்டதாகவும் தெரியவருகிறது.

அரசமைப்புச் சட்டத்தை மறு ஆய்வு செய்வதற்காக பிரதமர் வாஜ்பாய் தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி மேற்கொள்ளும் முயற்சிகளை முறியடிக்கும் வரையில் தமது போராட்டத்தை தொடர்வதெனவும் காங்கிரஸ் கட்சி இக்கூட்டத்தில் தீர்மானித்துள்ளது. (சி-உ)

## ஷெரீப் மீதானதீர்ப்பு வியாழனன்று நீதிபதிக்குப் பலத்த பாதுகாப்பு

### மரண தண்டனை அல்லது ஆயுட்சிறை என ஊகங்கள்

(இஸ்லாமபாக்)

பாகிஸ்தானின் பதவி கவிழ்க்கப்பட்ட முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரிப் மீதான விசாரணைகள் பூர்த்தியடைந்துள்ளதையடுத்து சிறப்பு நீதிமன்றத்தினால் எதிர்வரும் வியாழக்கிழமை தீர்ப்பு வழங்கப்படவுள்ளது. இதனை யொட்டி தீர்ப்பு வழங்கவுள்ள நீதிபதிக்குப் பலத்த பாதுகாப்பு வழங்கப்படுகிறது.

ஆட்கடத்தல், விமானக் கடத்தல், கொலை போன்ற குற்றச்சாட்டுகளின் பேரில் நீதிமன்றின் முன் நிறுத்தப்பட்ட நவாஸ் ஷெரீப்புக்கு ஆயுட்காலச் சிறைத்தண்டனை வழங்கப்படலாம எனப் பரவலாக எதிர்பார்க்கப்படுகிறது.

இருந்த போதிலும் மரண தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டாலும் அதிசயப்படுவதற்கு இல்லையென அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே ஷெரிப் மீதான தீர்ப்பு கடுமையானதாக இருக்கும் பட்சத்தில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை தானே தலைமையேற்று நடத்தப்போவதுடன், இந் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்புவழங்குமாறும் ஷெரிப்பின் மனைவி பலகட்சிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் தெரியவருகிறது.

இவற்றைக்கருத்திற் கொண்டு பாகிஸ்தான், அரசு தலைநகரில் முன்னதாகவே பாதுகாப்பு முன்னேற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

இதேசமயம்,

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப்புக்கு மரணதண்டனை வழங்கின் மோசமானபின்விளைவுகளை எதிர்நோக்க வேண்டிவரலாம் எனவும், உலக அரங்கில் பாகிஸ்தான் தனிமைப்படுத்தப்படலாம் எனவும் பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் திருமதி பெனாசிர்பூட்டோ எச்சரித்துள்ளார் (சி-உ)




## செய்திக் குவியல்

ஐ.நா சபையில் கூட இந்தியில் பேசி விடலாம் ஆனால் எமது நாட்டில் இந்தியில் பேச விடுகிறார்களில்லையே என்று இந்தியப் பிரதமர் வாஜ்பாய் பேசினார்.

அமெரிக்காவிற்கு வருடந் தோறும் 50 ஆயிரம் பெண்களும்.குழந்தைகளும் ஏமாற்றி அழைத்துச் செல்லப்படுகிறார்களென்று சி.ஐ.எ கண்டு பிடித்துள்ளது.

பெரும்பாலும் ஆசிய நாட்டவர்களே இப்படி அழைத்துச் செல்லப்படுகிறார்களென்று கூறப்படுகிறது.

இந்தியா, 2008 ஆம் ஆண்டு சந்திரனுக்கு ராக்கட் ஒன்றை ஏவ இருப்பதாக இந்திய விண்வெளி ஆய்வு நிறுவத்தினர் கூறுகின்றனர்.

ஜம்முகாஷ்மீரில் பஸ் விபத்தொன்றில் 6 பேர் இறந்ததாகச் சொல்லப்படுகிறது.

தென் கிழக்காசிய நாடுகளுடன் இந்தியா நல்லுறவைப் பேணி வளர்க்க வேண்டும் என்று தாய்வான் வெளியுறவு மந்திரி கூறியுள்ளார்.

பாகிஸ்தான் முன்னாள் அதிபர் நவாஷெரிப்பிற்கு எதிராகக் குற்றம் சாட்டப்பட்டு பாதகமானதீர்ப்பு வழங்கப்படும்மாயின் பாகிஸ்தான் உலக நாடுகளால் தனிமைப் படுத்தப்படும்என்ற பாகிஸ்தான் மக்கள் கட்சித்தலைவியான திருமதி பெனாசிர்பூட்டோ தெரிவித்தார். என்று செய்திகள் கூறுகின்றன. (து)

## ஜப்பானில் எரிமலை வெடிப்பு பிரதமர் ஒப்பீஸிக்கு இதயத் துடிப்பு

(டோக்கியோ)

ஜப்பான் நாட்டுப்பிரதமமந்திரி ஒப்பீஸிமருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். என்றும் அறிவிக்கப்படுகிறது.

62வயதான இவர்திடீரென இதய நோயினால் பீடிக்கப்பட்டு அவசர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். என்றும் சொல்லப்படுகிறது.

கடந்த சிலதினங்களாக எரிமலை வெடித்து பல அனர்த்தங்களை ஏற்படுத்தி வருவதும் பல்லாயிரக்கணக்கான மக்கள் பெரும்இன்னல்களுக்குள் சிக்கியிருப்பதும் பிரதமமந்திரியின் திடீர் இதய நோய்க்குக் காரணமென்று சொல்லப்படுகிறது.

இதேவேளை ஜப்பான் மந்திரி சபைக்குப் பெரும் தலையிடி ஏற்பட்டுள்ளதாகவும் உடனடியாக வேறு ஒருவரை தெரிவு செய்ய வேண்டிய நிலைக்கு உள்ளாகியிருப்பதாகவும் அரசுபுதியவர் விடயத்தில் அக்கறையுடன் தொழிற்படுவதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன

பிரதம மந்திரி ஒப்பீஸின் உடல் நிலைபற்றிபல வைத்திய அதிகாரிகள் ஈடுபட்டு வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (து)

## ரஷ்ய நிர்வாகத்தினர்-ஐ.நா. அதிகாரி பேச்சில் இழுபறி நிலை

(மாஸ்கோ)

ரஷ்ய நிர்வாகத்தினர்க்கும் ஐக்கியநாடுகள் சபையின் மனித உரிமை மீறல்கள் ஆணைக்குழு அதிகாரி மேரி றொபின்ஸனிற்குமிடையே இழுபறிநிலை தோன்றி இருப்பதாகத் தெரியவருகிறது.

செச்சினியாவில் இடம் பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாக எழுந்துள்ள குற்றச்சாட்டுக்களை ஆராய்வதற்கென அங்கு சென்றுள்ளமேரிறொபின்ஸன் இது தொடர்பாக நீதியான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் எனவும் செச்சினியாவின் தலைநகர் குறொஷ்னியில் அமைந்துள்ள ரஷ்யப் படையின் முகாமில் நீதி விசாரணைகளின்றி தடுத்து வைக்கப்பட்டு கொலை, சித்திரவதை, பாலியல் பலாத்காரம் என்பவை மேற்கொள்ளப்பட்ட முகாமைப் பார்வையிட அனுமதி வேண்டும் எனவும்கோரிக்கை விடுத்திருந்தார்;

ஆனால், அவரது விமானம் செச்னியா அருகிலுள்ள குடியரசான இந்துஷேஷியாவில் தடுத்துவைக்கப்பட்டுள்ளது.

இதற்குக் காரணம் அங்கு நிலவும் பனிப்புகார் என ரஷ்ய அதிகாரிகள் தரப்பில் கூறப்படுகின்ற போதிலும். தமது படைகள் புரிந்த அட்டூழியங்கள்அம்பலத்திற்கு வந்து விடும் எனும் அச்சம் காரணமாகவே விமானம் தடுத்து வைக்கப்பட்டிருக்கலாம் எனும் சந்தேகம் அரசியல் வல்லுநர்களிடையே தோன்றியுள்ளது.

இதேசமயம், சித்திரவதைகளுக்குப் பெயர்போன மேற்படி முகாமைச் சர்வதேச அதிகாரிகள் எவரும் இது வரை பார்வையிட முன்வராத போதும், மேரி றொபின்ஸனின் முயற்சி சாத்தியமற்றது எனவும் கருதப்படுகிறது. (சி-உ)

## மனைவியின் பிரசவ காலத்தில்ஆண்களும் சம்பளத்துடன் கூடிய லீவு பெறலாம்

(லண்டன்)

பிரிட்டனில் ஆண்களுக்கும் பெண்களைப் போல் சம்பளத்துடன் கூடிய பிரசவ லீவு வழங்கப்படவுள்ளதாகவும் இதற்கு பிரிட்டிஷ் பிரதமர் டொனி பிளேயர் ஒப்புதல் வழங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பிரிட்டனில் மனைவியின் பிரசவ காலத்தில் பிள்ளையுடன் கூட இருப்பதற்காக 13 வார லீவு உண்டு. ஆனால் சம்பளம் கிடையாது இப்போது இது பற்றி புதிய தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கொள்கையளவில் ஆண்களுக்கும் சம்பளத்துடன் கூடிய லீவு வழங்க இணக்கம் காணப்பட்டுள்ளது.

இலங்கையில் முதலிரு பிரசவங்களுக்கும் தான் பெண்களுக்கு சம்பளத்துடன் கூடிய மூன்று மாத பிரசவ லீவு உண்டு. மூன்றாவது பிரசவம் என்றால் 42 நாள் லீவு மாத்திரமே ஆண்களுக்கு இதற்காக லீவு வழங்கப்படுவதில்லை. என்பது குறிப்பிடத்தக்கது. (சி)



உ


# யாழ். நல்லூர் - நாயன்மார்கட்டு அருள்மிகு ஸ்ரீஅரசடிப்பிள்ளையார் (குளத்தடிப்பிள்ளையார்) இரதோற்சவ சிறப்பு மலர்

## ஸ்ரீ அரசடிப் பிள்ளையார் ஆலய அற்புத வரலாறு

உலகினில் இருள்கெட, பிடியதின் உரு உமை கொள, பிறைமுடி உடையவன் மருவிட உதித்த கடகரி முகத்துக் கடவுளான கணபதி திருவிடம் இது வென எழுந்தருளியிருந்து, நாயன்மார்கட்டில் நல்லொளி பெருக, ஆழிசூழ் உலகில் சூழ்கலி நீங்க, திடமுடன் பதமதைப் பரவிடும் அடியார் மலமறத் தேரேறி வருகின்றான். பன்னூறு சிற்ப, சித்ர வேலைப்பாட்டுடன் தொண்ணூற்றி ஐந்தில், அமைக்கப்பட்ட தேரில் இவர்ந்து வரும் தேவாதிதேவன்.

யாழ்ப்பாண அரசு (1216 1621)பேரும் புகழும் வாய்ந்து சீருடனும் சிறப்புடனும் திகழ்ந்த காலத்தில், அதன் தலைநகராய் நல்லூர் அமைந்தது, ஆரியச்சக்கரவர்த்திகள் என்ற பட்டப் பெயரோடு இவ்வரசை ஆண்டமன்னர்கள், தமது தலைநகருக்கு அணியாகவும் காவலாகவும் உருவாக்கிய ஆலயங்களுள் ஒன்றே, நல்லூருக்குக் கிழக்கே திகழ்ந்து அருள் மழை பொழிந்திடும் அரசடி விநாயகர் ஆலயமாகும்.

வான்தொட உயர்ந்து, வந்தவர்க்கெல்லாம் நிழல் அளித்திடும் அரசமரமும் அதன் முன்னர் எழிலும் வளமும் சுரந்திடும் தாமரைத் தடாகம், வயல்கள் என்பனவும் சூழ்ந்திருக்க இவற்றின் பின்னணியிலே விநாயகப் பெருமான் எழுந்தருளி அருள் பாலிக்கும் ஆலயம் திகழ்கின்றது. நாயன்மாருக்குக் குரு பூசை மடம் அமைந்ததும் அரசகேசரிப்புலவர் (பரராச சேகர மகாராசாவின் (1478 1519 மருகர்) அமர்ந்து இரகுவம்சம் பாட இடமான மண்டபத்தைக் கொண்டதும் வெயிலுகந்த பிள்ளையார், பேச்சியம்பாள் ஆகிய தெய்வங்களைத் தன்னகத்தே பெற்றதுமாகிய நாயன்மார் கட்டின் திலகமாய் விளங்குவது அரசடிவிநாயகர் ஆலயம் என்பது குறிப்பிடத் தக்கது.



பழைமையும், அற்புதமும் வாய்ந்த அரசடிவிநாயகப் பெருமான் கடந்த ஆறு நூற்றாண்டுகளுக்கு மேலாய் இங்கு எழுந்தருளி எம்மையெல்லாம் விக்கினங்களிலிருந்து விடுவித்துக் காத்தருள் புரிந்து வருகின்றார்; அந்நியரான போர்த்துக்கீசரால் அழியுண்டபோதிலும் எம்பெருமான் அருளினால் இன்று நிருத்த மண்டபம், சபாமண்டபம்தம்பமண்டபம், தரிசன மண்டபம், மணிக்கோபுரம் என்பவற்றையெல்லாம் பெற்று தைமாத ரேவதி நட்சத்திரத்தில் மணவாளக் கோல உற்சவம், பங்குனி அபரபட்ஷ ரேவதி நட்சத்திரத்தைத் தீர்த்தாந்தமாகக் கொண்ட பத்துநாள் கொடியேற்ற உற்சவம், தமிழ்ப் புத்தாண்டு (வருடப்) பிறப்பு உற்சவம், முப்பெரும் தேவியருக்குரிய நவராத்திரி உற்சவம், விநாயகசஷ்டியை அந்தமாகக் கொண்ட பிள்ளையார் கதைபடிப்பு, சஷ்டி உற்சவம், மார்கழித் திருவெம்பாவை, விநாயகர்க்குப் பிரீதியான ஆவணிசதுர்த்திச் சிறப்பு உற்சவம் உட்படப் பன்னிரு மாதங்களுக்குமான சதுர்த்தி உற்சவம், வருடம் தோறும் வரும் மார்கழி அபரபட்ஷ சதுர்த்தி அன்று திருவாசக முற்றோதல் போன்ற பல நித்திய நைமித்திய பூசைகளையும் குறைவறக் கொண்டு எமது ஆலயம் விளங்குகின்றது.

கடந்த காலங்களிலே விநாயகப் பெருமானின் அடியார்கள் ஆலயத்திற்குப் பல திருப்பணிகள் புரிந்துள்ளமை நன்றியுடன் நினைவுகூர வேண்டியதாகும். இவர்களுக்கு விநாயப் பெருமானின் நல்லருள் என்றும் சுரந்துகொண்டேயிருக்கும் என்பதற்கு ஐயம் இல்லை.

1990 இல் படல் சப்பறம்

(6 ஆம் பக்கம் பார்க்க)

மலராக்கம்

**இராசையா குகதாசன்**

நாயன்மார்கட்டு

**சொக்கன்**

## ஆதீனமுதல்வரின் அருளாசிச் செய்தி

விநாயகர் அடியார்களே!

யாழ்ப்பாணம்நாயன்மார்கட்டுஅரசடிப்(அரசகேசரி) பிள்ளையார் இன்று தேர்ஏறி அருள் பலிக்கின்றது நாம்செய்த புண்ணியப்பேறாகும். விநாயக வழிபாடுநம் சமயத்தில் இன்றியமையாதது எக்காரியங்களை நாம் ஆற்றும்போதும் விநாயகரை வணங்கி செயற்படும் போது அக்காரியம் நிறைவை தரக்கூடியதாக அமைகின்றது. தனக்குமேல் தலைவன் இல்லாமையால் விக்கினங்களைநீக்கும் விநாயகனாக ஐந்துகரத்தையும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மாநகர ஆணையாளரின் செய்தி

நாயன்மார்கட்டு அரசகேசரிப் பிள்ளையாரின் வருடாந்த மஹோற்சவம் 27.03.2000 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்களுக்கு நடைபெறத் திருவருள் பாலித்திருப்பது எம் அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தரும்செய்தியாகும்

வேழமுகத்து விநாயகனைத்தொழவாழ்வு மிகுந்து வரும் என்ற வேத வாக்கினை தெய்வ வாக்காகப் போற்றி வாழுகின்ற சைவமக்கள் தமது விக்கினங்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## தேசான வாழ்வுதனை யருள்வாய்

ஆராத காதலொடு பாதார விந்தமது
ஆதார மென்றுவந்துன் அருள்நாடி
ஆசார சீலராக ஈசா உன் ஆலயமே
பேராவலோ டணைவார் பெருவாழ்வே
பேராரும் ரகுவம்சம் நீராழி மீதிருந்து
மாராசன் வரைய அருள் புரிதேவா
ஆரா அன்போ டெழுந்து நாயன்மார் கட்டிருந்தெம்
பாதாதி கேசம்காக்க வருநாதா
மாராணி ஆக்ஞை கேட்டுப் போரானை வடிவெடுத்து
மாசேனை அழித்துவந்த அதிதீரா
மாபாரதம் வடிக்கக் கூரார்வெண் மருப்பொடித்துச்
சீராகவே படிக்க அருள்பாலா
தேரேறி மும்மலமும் வேரோடு நின்றறுத்தே
தேசான வாழ்வுதனை யருள்வாயே
சீராரும் அரசடிவாழ் நீராரும் சடைமுடியார்
சேயேவி நாயகப் பெருமானே

முருகநேசன்

## மஹோற்சவ பிரதம குருவின் அருள் ஆசியுரை

சகல ஆன்மகோடிகளுக்கும் அருள் வழங்கும் பொருட்டு மஹோற்சவ காலத்தில் படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல்ஆகிய பஞ்சகிருத்தியங்களைச் செய்தருள் பவரும்உருவத்திருமேனி தாங்கி அருள் புரிபவரும் அரசகேசரிப் புலவரால் இரகுவம்ச காவியத்தை தமிழில் பாடிய இடமான யாழ். நாயன்மார்கட்டு பதியில் பல்லாண்டுகாலமாக

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இரதோற்சவம்

சைவ ஆலயங்களிலே உற்சவ காலத்திலே செய்யப்படும் ஒவ்வொரு கிரியையும் சிஷ்ருடி முதலிய ஒவ்வொரு கிருத்தியத்தைக் குறிப்பதால், அக் கிரியைகள் ஒவ்வொன்றும் ஆன்மாக்களது மலத்தை நீக்கி வீடுபேறு அளிப்பதாக உள்ளன.

மஹோற்சவத்தின் ஆரம்பத்தில் நடைபெறும் கொடியேற்றம் - படைத்தலையும், வாகன உற்சவம் காத்தலையும், இரதோற்சவம் - அழித்தலையும்;

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தேரேறும் தும்பிக்கையானே!

நாரணன் மருகா! நல்லூர்
நாயன்மார் கட்டினில் உறையும்
வாரண முகத்துத் தேவா! தாமரைக்
குளமருகு அமர்ந்த தலைவா!
பாரதக் கதையை வியாசர்
சொல்லிட எழுதிய இறைவா! அழகுத்
தேரினில் தோன்றும் துணைவா! எம்
துயரெலாம் தீர்ப்பாய் ஈசா!

நாயன்மார்கட்டு ப.மகேந்திரதாசன்


**கணேஷா பந்தல்**
இல. 25, அரசடிப்பிள்ளையார் வீதி,
நாயன்மார்கட்டு, நல்லூர்.

**ஸ்ரீ சுகந்தி சேல்ஸ் சென்ரர்**
இல. 276, 383, நாவலர் வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

**K. R. வீடியோ, பந்தல்,**
**தொலைத் தொடர்புச் சேவை**
இல. 270, கனகரத்தினம் வீதி,
நாயன்மார்கட்டு.

**சுதாஸ் கலைச்சோலை**
இல. 182, செம்மணி வீதி, நாயன்மார்கட்டு.

**சதீஸ் மரக்காலை, தீஸ் ஒடியோ**
கல்வியங்காடு - 49, கன்னாதிட்டி

**தீஸ் எலக்ரோனிக்ஸ்**
நல்லூர்.

**ஸ்ரீ சண்முகா**
**தச்சுத் தொழிற்சாலை**
17 A, இராஜேஸ்வரி வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

**அருச்சுனா**
இல. 272, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

**ஸ்ரீ நகைத் தொழிலகம்**
நாயன்மார் வீதி, 38, கன்னாதிட்டி,
நல்லூர். யாழ்ப்பாணம்.

**கபீசன் பல்பொருள் வாணிபம்**
இல. 151, K. K. S வீதி,
யாழ்ப்பாணம்.

**அனோஜன்**
**வார்ப்புத் தொழிற்சாலை**
79, மூத்தவிநாயகர் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

## மஹா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

கிழைத் திருநெல் வேலியம் பதி அருள்மிகு வெள்ளப்பிள்ளையார் ஆலய புனராவர்த்தனஸம்பு ரோசஷ்ஷன மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 6-ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

இதற்கான பூர்வாங்ககிரியைகள் இன்று செவ்வாய்க் கிழமை அதிகாலை 5. 00 மணிக்கு ஆரம்பமாகின்றது.

நாளை புதன்கிழமை காலை 9.00மணி தொடக்கம் மாலை 4.00மணி வரை அடியார்கள் எண்ணெய்க் காப்புசாத்தும் நிகழ்வு நடைபெறவுள்ளது. (செ-601)

## இரதோற்சவம்

(யாழ்ப்பாணம்)

நாயன் மார்கட்டு அருள்மிகு அரச கேசரிப் பிள்ளையார் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் கடந்த 27 ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து பத்து தினங்கள் திருவிழா நடைபெற்று, இன்று செவ்வாய்க்கிழமை இரதோற்சவம் நடைபெறவுள்ளது.

(செ-106)

# சட்ட விரோதமாக அமைக்கப்படும் வீதியோரகட்டடம்,மதில் அகற்றப்படும்

### நிறைவேற்றும் பொறியியலாளர் எச்சரிக்கை

[ஈச்சமோட்டை]

'வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் உள்ள வீதி ஓரங்களில் சட்டத்திற்குப் புறம்பான முறையில் அமைக்கப்பட்டுள்ள கட்டடங்கள் விடயத்தில் கடும் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும். இவ்வாறு வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பளைப் பிரிவின் நிறைவேற்றுப்பொறியியலாளர் திரு. சுதாகர் தெரிவித்தார்.

வீதி ஓரங்களில் கட்டடங்கள் மதில்கள் என்பன அந்தப் பிரதேச சபைகள் நகர சபைகள் என்பவற்றின் ஊடாக விண்ணப்பிக்கப்பட்டு வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் எழுத்து மூல அனுமதி பெறப்பட்ட பின்னரே அமைக்கப்படலாம்.

பல இடங்களிலே முறையற்ற கட்டட அமைப்பு நடை பெற்றுள்ளதால் பொலிஸ் பகுதியினரின் உதவியுடன் அவற்றை உடைத்து அப்புறப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

வீதிப் பொதுவழிச் சட்டத்தின் பிரகாரம் 'ஏ' தர வீதியின் மத்தியிலிருந்து 15 எம் தூரத்துக்கு அப்பாலும் 'பி' தர வீதியின் மத்தியிலிருந்து 12 'எம்' தூரத்திற்கு அப்பாலும் எக்கட்டடமாயினும் இருத்தல் அவசியம் இவ்வாறு சரியான இடத்தில் அமைக்கப்படும் கட்டடங்களுக்கு அனுமதி வழங்குவதில் தாமதம் எதுவும் ஏற்படமாட்டாது.

ஆயினும் இடம் போதாதென்பதால் வீதியினருகே அமைப்பதற்காக நட்டஈடற்ற ஒப்பந்த அடிப்படையில் செய்யப்படும் விண்ணப்பங்கள் எமது அதிகார சபையின் தலைமைக் காரியாலயப் பொது முகாமையாளருக்கு அனுப்பப்பட்டு அவர் அனுமதிக்கும் பட்சத்திலேயே அமைக்கும் உரிமையைப் விண்ணப்பதாரிகள் பெறுவர் இவ்வாறான பல விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

ஆனாலும் எமது எழுத்து மூல அனுமதியின்றி எந்த கட்டடத்தையும் வீதியோரங்களில் அமைக்கக் கூடாது இவற்றை மீறும் பட்சத்தில் கடும் சட்ட நடவடிக்கை மூலம் இக்கட்டடங்கள் அகற்றப்படும்.

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மாகாணப் பணிப்பாளரால் மார்ச் மாதம் 21, 30 திகதிகளில் சகல மாநகர நகர, பிரதேச சபைகளுக்கு இது பற்றிய சுற்று நிருபம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

[சி-59]

## புள்ளி விபர கைநூல்

(நல்லூர்)

யாழ். பிரதேச செயலகத்தை உள்ளடக்கிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் தோறும் திரட்டப்பட்ட புள்ளி விபரங்களைக் கொண்டு புள்ளி விபரக் கைநூல் ஒன்று வெளியிடப்படவுள்ளது.

வணிகம், உற்பத்தி, கால் நடை, மீன்பிடி, இயந்திர சாதனங்கள் போன்றவைகளின் புள்ளி விபரங்களடங்கிய கைநூல் வெளியிடுவதற்கான ஆக்கங்களை திட்டமிடல் உதவி இணைப்பாளர் பிரதேச ரீதியாகச் சேகரித்து வருகின்றார்.

(சி-109)

## சனி,ஞாயிறிலும் விற்பனை

(அச்சுவேலி)

எதிர்வரும் தமிழ்-சிங்கள புத்தாண்டினை முன்னிட்டு சனி.ஞாயிறு தினங்களில் யாழ்.மாவட்ட வர்த்தகர்கள் தமது வியாபார நிலையங்களைத் திறந்து வியாபார நடவடிக்கைகளினை மேற்கொள்ளலாம் என யாழ். மாவட்ட வணிகர் கழக வட்டாரத்தினர் அறிவித்துள்ளனர்.

(சி-14)

# இரதோற்சவ சிறப்பு மலர்....

### ஆதீன முதல்வரின்---

ஆனைமுகத்தையும் கொண்ட வடிவிலனாக வீற்றிருக்கின்றான் வரலாறும் பெருமையும்மிக்க பதி நாயன் மார்கட்டு, மன்னர்களும் சமய ஆன்றோர்களும் கற்றுணர்ந்த வல்லுநர்களும் வாழ்ந்த பிரதேசம் நாயன் மார்கட்டு. நம்நாட்டை ஆண்ட மன்னர்களால் உருவாக்கப்பட்ட ஆலயங்கள் எங்கள் நாட்டில் உண்டுஅவ் வரிசையில் இவ்ஆலயம் ஒன்றாகும். நம்வாழ்வை தேர்ந்து கொள்வதே தேர் திருவிழா ஆகும். வானத்தையும் பூமியையும் பாதாளத்தையும் குறிப்பது தேரினுடைய அமைப்பு. இந்தஉடம்பை எடுத்த ஆன்மா ஒவ்வொருவரும் தேரை வடம்பிடித்து இழுக்கின்ற போது பிறவிப்பயனை புரிந்துகொள்கிறான். மனித உடலை மூன்றாகப் பிரித்தார்கள் தலை, அரை, கால் என்றும். இதுபோன்று வானம், பூமி, பாதளம் என்று உலகையும் பிரித்தவர்கள் இத்தத்துவங்களை விளக்குவதே தேர்ஆகும் அஞ்ஞான இருளைநீக்கி மெஞ்ஞான ஒளியைதர இறைவன் தேர்ஏறி அருள்பாலிக்கின்றான். எல்லோரும் தேர்திருவிழா கண்டு மங்களமாக வாழ இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

''என்றும் வேண்டும் இன்பஅன்பு''

2 வது குருமஹா சந்நிதானம்

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள்**

### மாநகர ஆணையாளரின்--

களைக் கழைய விநாயகனை வணங்கிவரும் பாரம்பரியம் காலத்தால் நீண்டது.

எமது நாயன்மார்கள் வாழ்ந்த இடத்தில் கோவில் கொண்டிலங்கும் அரசகேசரிப் பிள்ளையார் அழித்தல் தொழிலைக் குறிக்கும் பொருட்டு இன்று தேரேறி வருவது கண்கொள்ளாக் காட்சியாக அமையும் என்பது திண்ணம். எம்பெருமானுக்கு புதிதாக வடிவமைக்கப்பட்ட ரதம் ஐந்தாவது தடவையாக இன்று பவனி வருவது அப்பகுதி வாழ் மக்களுக்கு ஆனந்தத்தைத் தருவதில் வியப்பில்லை.

முடிவின்றித் தொடரும் எம்மக்களின் துன்பங்கள் யாவும் தீர்ந்து விரைவில் நிம்மதி பிறக்க வேண்டுமென இந்நாளில் விநாயகனை வேண்டுவோமாக.

**வே. பொ. பாலசிங்கம்**

மாநகர ஆணையாளர் யாழ்ப்பாணம்.

### மஹோற்சவ...

கோவில் கொண்டெழுந்தருளியிருக்கும் அரசடி (அரசகேசரி)ப்பிள்ளையார் தேவஸ்தானத்தில் இரதோற்சவம் நடைபெறுவதையிட்டு மட்டில்லா மகிழ்ச்சி அடைகின்றேன். ஒன்று பட்டால் உண்டு வாழ்வு என்பதை வெளிப்படுத்த அனைவரும் ஒன்று சேர்ந்து நடாத்தப்படும் வழிபாடு மஹோற்சவம். அதிலும் இரதோற்சவம் மிகச் சிறந்த உற்சவமாகும். இந்த வருடம் ஐந்தாவது ஆண்டாக சித்திரதேர்திருவிழா நடைபெறுகின்றது.இக் காலத்தில் அனைவரும் திரிகரண சுத்தியோடு எல்லாம்வல்ல விநாயகக் கடவுளை வழிபட்டுஇஷ்டசித்திகளைப்பெற்றுக்கொள்வோமாக.மேலும் இவ்விழாவில் பங்கு கொண்டுள்ள அடியவர்கள்,உபயகாரர்கள்,தொண்டர்கள்,இம்மலர் அமைப்பில் பங்குகொண்டவர்கள் அனைவருக்கும் விநாயகப் பெருங்கருணையால் அஷ்டஐஸ்வரியங்களும் உண்டாவதாகுக.

''சர்வே ஜனாகா சுகினோபவந்து''

**சிவஸ்ரீ தி.விக்னேஸ்வரக்குருக்கள்**

ஆதீனகர்த்தா

வல்வெட்டி வேவில் வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்.

### இரதோற்சவ..

சப்பறத் திருவிழா உபயகாரரால் உபகரிக்கப்பட்டது 1995 இல் புதிய சித்திரத் தேர் சமைந்தது.

இடையறவன்றி ஒவ்வோராண்டும் பங்குனி மாதத்தில் கொடியேற்றத்துடன் தொடங்கி நடைபெறும் பெருவிழா (மஹோற்சவம்) 1996 இல் வலிகாம மக்களின் இடம் பெயர்வினால் நின்றுபோயிற்றுஎனினும் 1997 தொடக்கம் மீண்டும் சிறப்பாக மஹோற்சவங்கள் ஆண்டு தோறும் நடந்து வருகின்றன.

1999 இல் தெற்குப் புற மண்டபத்தில் அரைவாசி கட்டப்பட்டது. இவ்வாண்டு விநாயகப்பெருமானின் அடியவர்களினதும் யாழ். வர்த்தகப் பிரமுகர்களினதும் நிதி கொண்டு அடியவர்கள் புதிய மின்பிறப்பாக்கி ஒன்றை வழங்கியுள்ளமையினால்மஹோற்சவங்கள் விநாயகப்பெருமானின் அருள் ஒளி போன்றே மின்னொளி வெள்ளத்தில் மிகச்சிறப்பாக நடந்தேறுகின்றன.

இவ்வாலய உரிமையாளர்களாய்ச் சைவாசாரியார்கள் விளங்கி வேத சிவாகம முறை தவறாது பூசைகள், கிரியைகளைப், பத்திக்கனிவோடு நடாத்தி வருவதை எவ்வளவு பாராட்டினும் தகும்.

அமரர் சிவஸ்ரீ செல்லையா சதாசிவக் குருக்களின் அன்பும், அறிவும் ஆற்றலும்,வேத சிவாகம கிரியாவல்லபமும் வாய்ந்த, சிவபூஜை துரந்தரர் சிவஸ்ரீ ஸ்கந்த சிவபாத சுந்தரக் குருக்கள் (கட்டுவன் கணேசக் குருக்கள்) அவர்களின் ஆசியினாலும், ஆச்சார்ய வழி காட்டலிலும் வளர்ந்த நன் மக்கள் சிவஸ்ரீ. ச. மகேஸ்வரக் குருக்கள் சிவஸ்ரீ ச. மகாலிங்க குருக்கள் ஆகியோர் திறம்படக் கோயிலை நிருவகித்தும், நித்திய நைமீத்திய பூசைகளை விதிமுறை தவறாது நடாத்தியும் வருகின்றனர்.

''வேழமுகத்து விநாயகரைத் தொழ வாழ்வுமிகுந்து வரும்''

இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க.

### மேல் நிலையில் வைத்திடுவாய்

அரசடியி லேயமர்ந் தன்பர்க் கருளும்
கரிமுகனே! நாயன்மார் கட்டை- மருவுகின்ற
விக்கினங்கள் போக்கியதை மேல்நிலையில்
வைத்திடுவாய்
நக்கன் மகனே! நயந்து.

அன்பர்

### இரதோற்சவம்...

தீர்த்தம் - அருளலையும், மௌன உற்சவம் - மறைத்தலையும் குறித்து நிற்கின்றது. இரதோற்சவம் குறிக்கும் சம்ஹாரமானது துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனமாகும். தேர் அக்கினி சுவாலை போன்ற தோற்றமுடையது. இத் தேரானது பல சிறப்பம்சங்களைக் கொண்டதாக விளங்குகின்றது. இதில் ஊர், நாடு, உலகம், அகிலம், புவனம், அண்டம், பரவெளி, பெருங்கடல் யாவும் அடங்கும். இதைவிட வாழை, கரும்பு, கமுகு, தென்னை, பனை, பலா, சூரியன், சந்திரன் முதலான மூர்த்தங்களும் உள்ளன. இறைவனின் வியாபகத்தைக் காட்டவே உலகத்து விளை பொருட்கள் யாவும் தேரில் தொங்க விடப்படுகின்றன. இவற்றுக்கான தத்துவத்தை நாம் நோக்கின் மந்தரகேசரி மலைகள் அச்சாகவும் சூரியசந்திரர்கள் சக்கரமாகவும் ஆறு இருதுகள் சந்தியாகவும், பதினான்கு லோகமும் பதினான்கு தட்டுகளாகவும், ஆகாசம் ஆசனமாகவும் உத்யாத்த மலைகள் கூவிரமாகவும், நதிகள் கொடிகளாகவும் நட்சத்திரங்கள் விதானமாகவும் மோட்சலோகம் மேல்விரிப்பாகவும் அட்டமலைகள் தூண்களாகவும் சப்த சமுத்திரங்கள் திரைச்சீலையாகவும், மனுசாஸ்திரங்கள் மணிகளாகவும் வாயுக்கள் படிகளாகவும், நான்கு வேதங்கள் குதிரைகளாகவும். பிரமதேவன் சாரதியாகவும் கொண்டு இறைவன் திரிபுரசங்காரம் செய்வதாக புராணங்கள் கூறுகின்றது.

இரதோற்சவம் அழித்தலை குறிப்பதால் தேரில் எழுந்தருளும் மூர்த்தியும் சம்ஹார மூர்த்தியாகவே ரதத்தில் ஆரோகணிக்கின்றார் இதனை உணர்த்தும் பொருட்டு அம்மூர்த்திக்கு சிவப்பு நிறமான பட்டு வகைகளையும் மாலைகளையும் ஆபரணங்களையும் அணிவித்து அலங்கரிப்பதுடன் மஹோற்சவ பிரதம குருவும் அவ்வாறே சிவப்பு நிறமான ஆடை ஆபரணங்களை அணிந்து இறைவன் வேறு குரு வேறு என்றில்லாமல் ஒன்றாக காட்சியளிப்பர்.

இவ்வாறான சிறப்புக்கள் கொண்ட ரதோற்சவ நன்நாளிலே விநாயகப் பெருமான் சித்திரத் தேரில் எழுந்தருளி எங்களது ஆணவம், கன்மம், மாயை, ஆகிய மும்மலங்களையும் ஒழித்து எமக்கு அருள்செய்ய நாம் எல்லோரும் சேர்ந்து விநாயகப் பெருமானின் திருவடித் தாமரைகளைக் கரங்கூப்பி சிரந்தாழ்த்தி வணங்குவோமாக.

லோகா ஸமஸ்தா சுகினோ பவந்து

**சிவஸ்ரீ மகாலிங்க சிவக்குருக்கள்**

நாயன்மார்கட்டு.

பெருமைக்கும் ஏனைச்
சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்

- குறள்

வலம்புரி

## மயிலே மயிலே என்றால்

இன்றைக்கு வேண்டுவது சிந்தனையைக் கிழித்துக் கொண்டு செயற்படும் செயலாக்கமே அதற்கும் பிறர் தமர் பாரா நிமிர்ந்த நெஞ்சு வேண்டும். அக்கிரமம் எங்கு முளைக்கிறதோ அதனை உக்கிரமாக உய்யவிடாது அழித்தொழிக்க வேண்டும்.

சமாதானப் பறவை சிறகடித்துப் பறக்கப் போகின்றதென்ற பூரிப்பு துளிர்விடும் காலத்தில் பேரினவாதச் செயற்பாடுகள் தலைதூக்கக் கூடாது. அவை பிழையையும் அவலத்தையும் கொண்டு வந்துவிடும்.

பிறப்புரிமையை மறுத்து செயற்படும் எந்தச் செயற்பாட்டுக்கும் தண்டனை உடன் வழங்கப்படவேண்டும். தமிழ் மாணவனை புகைவண்டியிலிருந்து தள்ளும் அளவிற்குக் காப்பிலிநாடைத் தனமா? வெள்ளைக்காரன் ஆப்பிரிக்கப் பரம்பரை யென்றால் எங்களை எங்கள் மண்ணில் வாழவிட்டு உரிய இடத்திற்குப் போய் விடலாமே. கூலிக்குவான் ஓடிக் கூவி அழைக்கும் குண்டர்கள் தமிழர்கள் இருவரை ஏறவிடாது வெளியே தள்ளி மனித உரிமையை மீறியிருக்கிறார்கள்.

மேலே குறிப்பிட்ட சம்பவங்கள் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதோடு, பொங்கிவரும் சமாதானப் பொங்கலை சரித்து விடப்பார்க்கும் செயலாகவும் அமைந்துவிடுமோ என எண்ண வேண்டியிருக்கிறது.

உரிய ஒன்றை மிலேச்சத்தனமாக மறுத்து மறைத்ததால் எழுந்த இனப்பிரச்சினை இன்று குருதி ஆற்றில் கும்மாளமடிக்கிறது. கருதிக்கருதி கனன்ற நெஞ்சுடன் அடைகின்ற உயிரிழப்புக்கள் ஏராளம்; அங்கவீனராகும் அவலங்களுமோ அதிகம்.

மூர்க்கனும் முதலையும் கொண்டதுவிடா எனக் கேள்விப்பட்டிருக்கிறோம். அதுதான் நிலையென்றால் எங்கள் சுயநிர்ணயத்தைச்சுரண்ட இவர்கள் யார்? என்ற குரல் தேர் இருப்புக்கு வரும்போது ஊன்றி, உரக்க, உருக்குலையாது ஒலிக்கட்டும்.

- அன்புடன் ஆசிரியர்

# இரத்தஅழுத்தம் உள்ளோர் உணர்ச்சிவசப்படல்

# விபரீத விளைவுகளை ஏற்படுத்திவிடும்

★ டாக்டர் ஏ. ராஜேஸ்வரி ★

இரத்த அழுத்தம் ஏற்படுவது ஏன்? அதிக இரத்த அழுக்கத்தின் காரணங்களைத்திட்டவட்டமாகக் கூற முடியாது ஆனால் பரம்பரையும் ஒரு காரணமெனலாம். அதாவது பெற்றோரிலிருந்தும் பிள்ளைகளுக்குப்பிறவித் தொடர்பாக வரக்கூடியது என்று இப்போது கண்டு பிடித்திருக்கிறார்கள்.

ஓய்வு ஒழிச்சல் இல்லாமல் மனோ உழைப்புச் செய்வதும் இரத்தத்தை அதிகப்படுத்தும் இறைச்சி, முட்டை போன்றபுரதப்பொருள்களை அதிகமாக உண்ணுதலும் மிளகு, கராம்பு. இலவங்கப்பட்டை முதலிய வாசனைச் சரக்குகளை அதிகமாக உபயோகித்தலும் ஒரளவு காரணமாகலாம். கவலை அமித உணவு, தேயிலை புகையிலை முதலியவையும் இரத்தக் கொதிப்பை உண்டாக்கக் கூடும்.

ஆனால் எந்தளவில் என்று திட்டமாகச் சொல்ல முடியாது இரத்தக் கொதிப்பின் காரணங்கள் எவைகளாக இருந்தாலும் சரி அவை நீண்டகாலமாக உள்ளூர இருந்து சிறிது சிறிததாகத்தான் இரத்த அழுக்கத்தை அதிகப்படுத்தும்என்று தெரிகின்றது. ஆகையால் இந்நோய் ஏற்படாமல் தடுக்க விரும்புவோர் இளம் பராயத்தில் இருந்தே அதற்கு அணை போட்டுக் கொள்ள வேண்டும்.

நம்முடைய இரத்த அழுத்தம் எப்பொழுதும் ஒரே நிலையில் இருப்பதில்லை அன்றாட வாழ்க்கை நிகழ்ச்சிகளால் அது அடிக்கடி கூடவும் குறையவும் செய்யும். நாம் படுத்திருக்கும் போது இருப்பதை விட எழுந்து நடமாடுகையில் அதிகமாகவும் இருக்கலாம். (இதற்குத்தான் பெட்றெஸ் றும்ஒரு மருந்தென்கிறோம்) அச்சம் துயரம் முதலிய உணர்ச்சிகளால் அது 30 முதல்60என்ற வரை ஏறலாம் அற்பக்காரியங்களுக்கும் இது ஏறி இறங்கும். (அதிகூடியசந்தோஷத்திலோ அல்லது தொழிலில் நஷ்டமடைந்தாலோ உறவினரின் இழப்பு போன்றவைக்கும்) ஆனால் இதனால் கெடுதியில்லை.

### இருதயம் நின்றுவிடும்

இரத்தக் கொதிப்பின் காரணங்களும் அதன்பலன்களும் மேற்கூறியவை தெரிந்ததே. இருதயம் அதிக அழுக்கத்திற்குள்ளாகி தொழில் செய்கின்றபோது அந்த அளவிற்குத் தக்கபடி விரிந்து கொடுக்கவில்லை என்றால் அது நின்று விடும்.

### இரத்தக் குழாய்கள் வெடிக்கும்

இரத்தக் கொதிப்பு இரத்தக் குழாய்களைத் தாக்கும். நமது இரத்தக் குழாய்கள் றப்பரைப் போல் நெகிழ்ந்து கொடுக்கக்கூடியவை. ஆனால் நமக்குவயது ஏற ஏற அவை சாதாரணமாகஇந்த நெகிழ்ச்சித் தன்மையைஇழந்து சுலபமாக முறிந்து போகும் தன்மையை அடைகின்றன. இரத்தக் குழாய்களுக்கு இந்த நெகிழ்ச்சித் தன்மை இருக்கும்வரையும் இரத்தக் கொதிப்பினால் கூட அவ்வளவாகக் கெடுதி ஏற்படாது. ஆனால் அந்தத் தன்மை கெட்டபிறகு இரத்தக் கொதிப்பினால் ஏற்படும் அமுக்கத்தைத் தாங்க முடியாமல் அவை வெடித்தாலும் வெடித்துவிடலாம்.

நாற்பது, நாற்பத்தைந்து வயதிலே இரத்த அமுக்கம் அதிகமாகஇருக்கிறதென்று கண்டவுடனே அதற்கு பரிகாரத்தைத் தேடிக்கொள்ள வேண்டும் ஐம்பது வயதிற்கு மேலே காணும் இரத்தக் கொதிப்பு நோயை நிவர்த்தி செயயலாம். என்றாலும் அதிக முயற்சி தேவை. நோயை மேலும் கூடவிடாமல் தடுக்கவும் ஆயுளைக் கூட்டிக்கொள்ளவும கூடும்.

இரத்தக் கொதிப்புள்ளவர்கள இரத்தக் கொதிப்பு நோயினால் அவதிப்படுகிறவர்கள் எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருக்கப் பழகிக் கொள்ள வேண்டும் தங்களுடைய அசௌகரியங்களையும் கஷ்டங்களையும் மறந்து விடவேண்டும் மனக்கவலை, கலக்கம் பயம் பதற்றம்ஆகிய உணர்ச்சிகளுக்கு. ஆளாகக்கூடாது. சந்தோஷம் தனியான விடயம் அல்ல அது உள்ளிருந்து வருவதென்பதை மறந்துவிடக்கூடாது. போதிய அளவு ஓய்வாக இளைப்பாற வேண்டும. அதிக நேரம் தூங்க வேண்டும். அவதிப்பட்டு ஒருவரும் எழும்பக் கூடாது அதிக நேரம் தூங்க வேண்டும்.

ஒழுங்காக வாழவேண்டும் சாப்பாட்டுக்கும் தூக்கத்திற்கும் மலக்கழிவுக்கும் குறித்த காலங்கள் இருக்க வேண்டும் அவசரப்பட்டு இவற்றை செய்யக்கூடாது. மலச்சிக்கல் இல்லாமல் கவனித்துக் கொள்ள வேண்டும். தினம் மலம் ஒரு தடவையாகிலும்கழிய வேண்டும். இரண்டு தடவை போனாலும் பரவாயில்லை ஆனால் வயிற்றோட்டம் இருக்கக் கூடாது கூடுதலானதண்ணீர் குடிப்பதனாலும் பொருத்தமான உணவினாலும் பழங்களைச் சேர்த்துக் கொள்வதாலும் மலம் ஒழுங்காகக் கழிதல் நல்லது இரத்தக் கொதிப்பினல் அவதிப்படுகிறவர்கள் காப்பி, கொக்கோ, தேனீர் பானங்களை நீக்க வேண்டும்

### மருத்துவ விளக்கம்

# 'மாயையின் இருளில்சிக்கி, உழன்று தெய்வீக அருள் நெறி மறப்பதாகாது - அல்லவா' என்கிறார் ஷண்முகநாதக்குருக்கள்

(யாழ்ப்பாணம்)

'நாகரிகம் என்ற மாயையில் சிக்கிய எமது சமுதாயம் இன்று தவறான பல நடைமுறைகளைக் கைக்கொண்டு வருவதனை அவதானிக்க முடிகிறது. இது விஞ்ஞான யுகம், கணனியுகம், இன்ரநெற் யுகம், என்றெல்லாம் மார் தட்டிக் கொள்வதைத் தப்பானதுஎனக்கூறமுபாதுதான் ஆனால் அதற்காக எஞ்ஞான்றும், நிரந்தர ஆத்ம சுகம் தரும் மெய்ஞ்ஞானத்தை மறந்திடல் தகுமா? உதாரணத்துக்கு ஒரு பிறந்த நாள் கொண்டாட்டத்தை எடுத்துக் கொண்டால் அதனையொட்டி தயாரிக்கப்பட்ட கேக்—ஏற்றப் பட்ட ஒளி வாயால் ஊதியணைக்கப்பட்டு பின் வெட்டி பரிமாறப்படுகின்றவழக்கம் உள்ளது. மங்கள வாழ்வுக்குக் கட்டியம் கூறுவதனைப் உட்பொருளாகக் கொண்டு ஏற்றப்படுகின்ற ஒளியானது ஊதி அணைக்கப்படுதல் ஏற்புடையது தானா என்பதனை எண்ணிப் பார்க்க வேண்டும்.,

மேற் கண்டவாறு கடந்த வெள்ளிக்கிழமை மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசாமி கோயிலில் நடைபெற்ற சமய நிகழ்வில்உரை நிகழ்த்தியமேற்படி கோயில்ஆதீன கர்த்தாவும், தமிழ், ஆங்கிலம் சமஸ்கிருதம் ஆகிய பாண்டித்தியம் மிகப் பெற்றவருமான மகாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக்குருக்கள் கூறினார்.

அவர் அங்கு பேசுகையில் இவ்வுலகில் எக்காலமும் நிலைக்கக் கூடியது தூய பக்தி மார்க்கம் ஒன்றே. அதன்மூலம்கிடைக்கின்றஆனந்த மிகு பலத்துக்கு ஈடிணை எதுவுமில்லை எனவே நிரந்தரம் இல்லாத இவ்வுலகில் நாம் எதை எதையோ நிரந்தரம் என எண்ணி மாயையின் இருளில் உழலுதல் வேண்டியதில்லை.

ஆலய தரிசனத்துக்கு இறைவன் சந்நிதானத்தில் தூய்மை ஒன்றே பிரதானம் அங்கு எவ்வித ஏற்ற தாழ்வுக்கும் அறவே இடம் கிடையாது.

வாழ்வில் மனப்பக்குவம் அடைய தெளிவான சிந்தனையுடன் கூடிய பக்தி மார்க்கமே மிகச் சிறந்தது என்பு உளமார உணரப்பட வேண்டும் என்றும் எமக்கு உய்வையளிக்கக் கூடியது இறையருள் ஒன்றே என்பது தெளிந்துணர்வோம் ஜெகத்தில் உயர்வோம் என்றார்.

(சி)



## தவக்கால சிந்தனை

28 ஆம் நாள்

இன்றைய வாசகத்திலே தரும் செய்தியாவது துன்பங்கள் நமக்குப் படிப்பிணையாக அமைகின்றது நாம் இவ்வுலகில். எந்த அளவுக்கு துன்பப் படுகின்றோமோ அந்த அளவுக்கு மறுவுலகில் நமக்குப் பலன் கிடைக்கும். இச்செய்தியை மனதில் கொண்டு எமது வாழ்விலே மற்றவர்களால் எமக்கு ஏற்படுகின்ற கவலைகள், மனமுறிவுகள், ஏமாற்றங்கள், துயரங்களை முழு மனத்துடன் ஏற்று சகித்து வாழ முற்படவேண்டும். குறிப்பாக இக்கால கட்டத்திலே மற்றவர்கள் செய்யும் குறைகுற்றங்களை மனதில் கொள்ளது நாம் அவர்களுக்கு துன்பதுயரங்கள் வரும் வேளைகளில் எம்மால் இயன்ற உதவிகளைச் செய்து முன்மாதிரியான வமழ்க்கை வாழவேண்டும். அப்போது தான் அவர்கள் மனமாற்றம் அடைந்து உண்மைக் கிறிஸ்தர்களாக வாழவும் நாம் இறைவனின் நித்திய வீட்டிற்குச் செல்லவும்வழிபிறக்கும்.

- கொண்ஸ்ரினா
யாழ்ப்பாணம்

## மணவாளக் கோலம்

கோண்டாவில் நெட்டிலிபாய் பிள்ளையார் கோயில் மணவாளக் கோலம் 1008 சங்காபிஷேகத்துடன் நாளை புதன் கிழமை காலை நடைபெறும்.

அன்று மாலை அடியார்கள் கற்பூரச் சட்டி ஏந்திமுன்வர விநாயகப் பெருமான் வீதி உலாவரும் நிகழ்ச்சியும் இடம் பெறும். (சி)

### கொழும்பு புறக்கோட்டைப் பகுதியில்

# பொலிசார் நேற்று தீவிர தேடுதல் தமிழ் இளைஞர், யுவதிகள் கைது

(கொழும்பு)

கொழும்பு, புறக்கோட்டை, வாழைத்தோட்டம் ஆகிய பகுதிகளில் நேற்று திடீர் சோதனைகளை நடாத்திய பொலிசார் ஒன்பது தமிழ் இளைஞர், யுவதிகளைக் கைது செய்து புறக்கோட்டைப் பொலிசாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட ஒன்பது பேரில் இருவர் பெண்களாகும்.

கைது செய்யப்பட்டவர்கள் லொட்சுகளிலும், உறவினர்களிடமும் தங்கியிருந்தவர்களாகும்.

தடுத்து வைக்கப்பட்டுள்ள இளைஞர்களும், யுவதிகளும் கொழும்பு புறக்கோட்டைப் பொலிசாரினால் விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர். (வ)

## விமானத் தாக்கு

(கொழும்பு)

நாகர்கோவில் பகுதியில் விமானத் தாக்குதல் நடாத்தப்பட்டதாக படைத்தரப்பு நேற்று தெரிவித்தது.

இத்தாக்குதலினால் ஏற்பட்ட சேதங்கள் குறித்த தகவல் எதுவும் நேற்று மாலை வரை வெளியிடப்படவில்லை. (க)

### அரசு புலிகள் - -:

ஒன்றியம் ஜனாதிபதியைக் கேட்டுள்ளது.

15உறுப்பினர்களைக் கொண்ட ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப்புலிகளுக்கும் அரசபடைகளுக்குமிடையே தீவிரயுத்தம் நடைபெற்று வரும் இவ்வேளையில் மேற்கண்டவாறு ஜனாதிபதி சந்திரிக்காபண்டார நாயக்காக குமாரதுங்காவை கேட்டுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் உதவியை பெற்று வரும் இலங்கையைஇனப்பிரச்சினை விவகாரத்தில் தீவிர கவனம் செலுத்துகின்றது.

ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கின்ற நோர்வே இலங்கைஇனப்பிரச்சினையில் தலையிட்டு வருவதை ஒன்றியம் வரவேற்றுள்ளது.

தனியார் மீதும் செய்தி ஊடகங்கள் மீதும் தாக்கப்படும் தாக்குதல்களை ஐரோப்பிய ஒன்றியம் வன்மையாகக் கண்டிக்கிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது, [வ-7]

### இடம்பெயர்ந்தோரு - -

தேவை தொடர்பாக யாழ். மாவட்டப் பாராளுமன்ற [illegible] டக்ளஸ் [illegible]

கை மாதா கோவிலில் 119 பேரும், மருதங்குளம் பிள்ளையார் கோவிலில் 54 பேரும், துர்க்கை அம்மன் கோவிலில் 31 பேரும், எழுதுமட்டுவாள் அரசினர்தமிழ்க்கலவன் பாடசாலையில் 138 பேரும் தங்க வைக்கப்பட்டுள்ளனர். (வ-க)

## தாயும் சிசுவும் படுகாயம்

(பூநகரி)

பூநகரிப் பகுதியில் நேற்று முற்பகல் 10.00 மணியளவில் ஷெல் வீழ்ந்து வெடித்ததில் இளம் தாய் ஒருவரும், 45நாள் சிசு ஒன்றும் படுகாயமடைந்துள்ளதாக தகவல் ஒன்று நேற்று தெரிவித்தது.

தயாபரன் விஜி (வயது24] என்ற தாயும், தயாபரன் வினோத் (45 நாள் சிசு) ஆகியோரே காயமடைந்தவர்களாவர் எனவும் அத்தகவல் மேலும் தெரிவித்தது. (க)

## நாளை மெய்வன்மை போட்டி

யாழ்ப்பாணம் உயர்தர தொழில்நுட்ப நிறுவனம் நடாத்தும் மெய்வன்மைப் போட்டி திருநெல்வேலி முத்துத்தம்பி விளையாட்டு மைதானத்தில் நாளை 05 ஆம் திகதி பி.பகல் 1.00 மணியளவில் இடம்பெறும்.

மேற்படி நிறுவனத்தில் கல்வி பயிலும் முழுநேர, பகுதிநேர மாணவர்கள் நிறுவனத்திற்கு இன்று வருகை தந்து போட்டிகள் பற்றிய விபரங்களை பெற்றுக் கொள்ளுமாறு இயக்குநர் தெரிவித்துள்ளார். (க)

### இருவர் - .

மும் இராணுவத்தால் கைது செய்யப்பட்டு ஊரெழு இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக மனித உரிமைகள் ஆணைக் குழுவிடம் புகார் செய்யப்பட்டுள்ளது. (வ-03)

### தொண்டர் ஆசிரிய - - -

கள் நேற்றுக்காலை ஈழமக் ஜனநாயகக் கட்சியின் தீகவக் காரியாலயத்தில் வைத்து தொலைபேசி மூலம் டக்ளஸ் தேவானந்தாவுடன் தொடர்பு கொண்டபோதே மேற்கண்ட உறுதிமொழியை அவர் வழங்கினார்.

சுமார் 60 இற்கும் மேற்பட்ட தொண்டர் ஆசிரியர்கள் தீவக ஈ.பி.டி.பி.அமைப்பாளர் என். மதனராஜா ஊடாக தொடர்புகள் மேற்கொண்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. (க-75)

### விசாரணை...

குழு இன்று விசாரணை செய்வதற்கு முன்னோடியாக விமான விபத்து நடந்த இடத்தினை சென்று பார்வையிட்டு விசாரணைகளை ஆரம்பிக்கவுள்ளனர்.

இந்த விசாரணைகளின் போது கறுப்புப் பெட்டி விவகாரமும் எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

இந்த விசாரணைக்குழுவினர் சுமார் ஒரு மாத காலம் தங்கியிருந்து விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளனர். (வ)

# யாழ்.கல்விவலய பணிமனை முன் நேற்று உண்ணாவிரதப்போராட்டம்

(யாழ்ப்பாணம்)

ஆரம்ப நெறி ஆசிரியர் தெரிவுக்கு விண்ணப்பித்தும் நேர்முகப்பரீட்சைக்குஅழைக்கப்படாத சுமார் 500பேர் வரையிலானோர்நேற்று யாழ் கல்வி வலய பணிமனை முன்பாக மாபெரும் அடையாள உண்ணாவிரதப்போராட்டம் ஒன்றை நடாத்தினர்.

கொளுத்தும் வெய்யிலையும் பொருட்படுத்தாது இப்போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் ஆக்ரோஷமாக கோஷங்களை எழுப்பியவாறு உணர்வு பூர்வமாக காணப்பட்டனர்.

தொடர்ந்து நாம் ஏமாற ஏமாளிகள் அல்ல.

ஆசிரியர் நியமனத்தினை பாரபட்சம் காட்டி தெரிவு செய்யாதே

பாதிக்கப்பட்டோர் சங்கத் தலைவர் பா.மணிவண்ணன் தலைமையில் மேற்படி பேராட்டம் இடம்பெற்றது.

இதேவேளை நேற்றுப் பிற்பகல் இரண்டு மணியளவில் உண்ணாவிரதிகளைப் பார்வையிட வந்த ஈ.பி.டி.பி. யைச் சேர்ந்த பருத்தித்துறை பிரதேச சபை தலைவர் ஐ. சிறிரங்கேஸ்வரன் அலுவலகப் பொறுப்பாளர் எஸ். பிறேம் ஆகியோர் தமது தலைவர் ஆளுனருடன் இது தொடர்பாக பேசவிருப்பதாகவும் பத்தாம் திகதிவரை பொறுத்திருக்கும் படியும் உண்ணாவிரதம் மேற்கொண்டோருக்கு வழங்கிய உறுதி மொழியைத் தொடர்ந்து உண்ணாவிரதிகள் அமைதியாக கலைந்து சென்றனர். (03)

### தொண்டர் - - -

வலயக் கல்விப் பணிமனைகளுக்கு அனுப்பி வைத்துள்ளார். அவர்களின் பெயர் விபரங்கள் இங்கு பிரசுரமாகின்றது.

இவர்கள் இம்மாதம் 3 ஆம் திகதி முதல் நியமனம் செய்யப்படுகின்றார்கள்.

வலிகாமம் கல்வி வலயம்

**ஆங்கிலம்**

மாலினி கந்தசாமி, ஜெயந்தி பாலச்சந்திரன், சுப்பிரமணியம் உதயசங்கர், ஜெயலலிதா வேலுப்பிள்ளை காந்தரூபி சண்முகநாதன், கனகசபை சத்தியேஸ்வர, பிரறேமாவதி விஸ்வலிங்கம், சுதர்சினி சண்முகநாதன், ரவிச்சந்திரன் மகாலட்சுமி, கமலினி கார்த்திகேசு, தாரணி துரைசிங்கம், சண்முகநாதன் கோவேந்தன், மகாலிங்கம் லிங்கேஸ்வரி, ஜெயந்தி வைத்திலிங்கம், சுதாமதி சிவசுப்பிரமணியம், மதிவதானா இராசரட்ணம், சுமாலினி சிவசுப்பிரமணியம், கிருபாசினி மார்க்கண்டன், ஆன்ஜடா அருந்தவநாதன், சிவப்பிரியா லோகேஸ்வரன், அகிலா மயில்வாகனம், அல்லினல் சின்னராஜா அல்றீஸ் குறூஸ், பாலகிருஸ்ணராஜா ஜெயராணி, மனோராணி, வயித்திலிங்கம்.

**ஆரம்பக்கல்வி**

கமலச்செல்வி அழகரட்ணம்' இந்திராணி துரைராஜா, மார்க்கண்டு, ஜெபந்தினி, குமாரவேலு செல்வமலர், அகிலாதேவி செல்லத்துரை, கலைவாணிவயிரவப்பிள்ளை மேரி றெஜினா றஞ்சிதமலர் நவரட்ணசிங்கம், குமுதினி வேலுப்பிள்ளை. குமாரதர்சினி திருப்பதிராஜன், சசிமாலா சிவபாலசிங்கம், சுகிர்தா சியம்புநாதன், மைதிலி சிவநாதன், கௌரி முருகேசு, தமயந்தி சிவராஜா, குமாரையா லயனல் மோகனதாஸ், சந்திரலீலா சிவசுப்பிரமணியம்.

**கணிதம்**

தேவராஜா விக்னேஸ்வரன், சின்னத்தம்பி நித்தியானந்தன்.

**விஞ்ஞானம்**

கனகரட்ணம் தேவபாலன்.

யாழ், கல்வி வலயத்தால் நியமனம் பெறறவர்களின் பெயர் விபரம் இம்மாதம் 2 ஆ திகதி வலம்புரியில் பிரசுரிக்கப்பட்டது தெரிந்ததே.

தென்மராட்சி கல்வி வலயம்

**ஆங்கிலம்**

நடராஜா வசந்தி, சாந்தினி ஜீவரத்தினம், ஜெகதீஸ் தம்பிராஜ்,

**ஆரம்பக்கல்வி**

செபஸ்தியாம்பிள்ளை மேரி மார்கிறேட், செல்வராசா சாரதா, கந்தையா பற்குண சோதி. தவலோஜினி பத்திராஜா.

வடமராட்சி கல்வி வலயம

**ஆரம்பக்கல்வி**

சூரியகுமாரன் சசிகலா, இரவிச்சந்திரன் சுதாமதி,

**சித்திரம்**

சிவராஜா அருள்ராஜன்.

**ஆங்கிலம்**

சோபியா கலைவாணி திருச்செல்வம், அமிர்தராணி கந்தப்பு, கலைநிதி கந்தசாமி சற்குரு சந்தியபாமா, வில்லியம் நெப்போலியன் யோன் பில்லர், ஸ்ரீபன் வெந்தங்கோன் மேரிஆன், செல்வராணி தங்கராஜா, கோகிலவாணி சிவலிங்கம், சேமசுந்தரம் கவிதா, சண்முகலிங்கம் வினோதினி, லூட்ஸ் மத்தேயு முத்துராஜா, வேலாயுதம் கலைச்செல்வி.

தீவகக் கல்வி வலயம்

**விஞ்ஞானம்**

யோகராணி கணபதிப்பிள்ளை.

**ஆங்கிலம்**

ஜெயகௌரி திருநாவுக்கரசு நோபட் சிலுவைராஜா ரோஸ்ஒலியா

அருட். சகோ. சாந்தி சிறேஸ் பாக்கிய செபநாயகி நோபட் சிலுவைராஜா, மரியசிலன் ஜோர்ஜ் கிளமென்சி, நடராசாமயூரன், பரராஜசிங்கம் சித்திராதேவி, நமசிவாயம் பிருந்த, பரநிருபசிங்கம் சுரேஸ்குமார், கவிதா சாம்பசிவம், விஜிதா ஜெயநாயகி செபமாலை, காசிநாதன் சுகேந்திரன், துரைராசா சுஜந்தன், திருஞானசம்பந்தமூர்த்தி சூரியகாந்தன்.

**ஆரம்பக் கல்வி**

நகுலராணி நாகரத்தினம்

## வடக்கு-கிழக்கு மாகாணகல்வி அமைச்சு செயலருக்கு மகஜர் அனுப்பிவைப்பு

ஆரம்பநெறி ஆசிரியர் தெரிவிற்கு விண்ணப்பித்தவர்களை நேர்முகப்பரீட்சைக்குஅழைக்காமைகுறித்து தங்களுக்கு ஏற்கனவே அறிவித்தும் கூட தங்களிடமிருந்துபதில்கிடைக்காமையினால் அடையாள உண்ணாவிரத போராட்டத்தை நடாத்த வேண்டி ஏற்பட்டது.

ஆரம்பநெறி ஆசிரியர் தெரிவில் புறக்கணிக்கப்பட்டோர்சங்கத்தினால்வடக்குக் கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் செயலாளருக்கு அனுப்பி வைத்த மகஜரில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம் மகஜரில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது

இதற்கும் ஒரு சாதமான பதிலை ஒரு வாரத்திற்குள் தரத்தவறும்பட்சத்தில் தொடர்ச்சியான சுழற்சி முறையிலான உண்ணாவிரசப் போராட்டத்தை நடாத்துவதற்கும், எதிர்வரும் 17 ஆம் திகதி நடைபெறவிருக்கும் ஆசிரியர் தெரிவுக்கான நேர்முகப்பரீட்சையை நிறுத்துவதற்கும் சங்கம் முடிவு செய்துள்ளது,

எனவே எமது கோரிக்கைகளை ஏற்று எமக்குச் சாதகமான பதிலைத் தருவீர்கள் என்று நம்புகின்றோம். இவ்வாறு மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம் மகஜரின் பிரதிகள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கா,, மேலதிக கல்விப்பணிப்பாளர் வடமாகாணம், கல்விப்பணிப்பாளர் யாழ் கல்விவலயம்-1, யாழ்.மாவட்டபாராளுமன்ற உறுப்பினர் ஈ.பி.டி.பி செயலாளர்நாயகம்டக்ளஸ்தேவானந்தா, செயலாளர் கல்விச் சேவைகள் ஆணைக் குழு. பொதுச் செயலாளர் அகில இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம், அரச அதிபர் யாழ். செயலகம், கல்வி அமைச்சு பத்தரமுல்ல, மேலதிக செயலாளர் கல்வி அமைச்சு ஆகியவற்றுக்கும் அனுப்பி வைத்துள்ளது. (வ-க-03)

### ஆனையிறவு - - .

குமாரதுங்க கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளார் என்று நேற்று செய்தி ஊடகம் தெரிவித்தது.

எல்.ரி.ரி.ஈயுடனான பேச்சுக்களில் முன்னேற்றம் ஏற்பட்டால் சண்டை நிறுத்தம் பற்றி ஆராயப்படும் ''என்றும் அவர் கூறியதாகவும் அது மேலும் தகவல் வெளியிட்டுள்ளது. (சி)

## பத்திரிகையாளர் இல்லம் மீது தாக்கு

மட்டக்களப்புமூந்தபத்திரிகையாளர் ஐ நடேசனின் இல்லத்தின் மீதுஇனம் தெரியாதோர் நேற்று முன்தினம் இரவு மேற்கொண்ட கைக்குண்டுத் தாக்குதலில் அவரது வீடு பலத்த சேதமடைந்தது.

இத்தாக்குதலில் அவருக்கு எந்த விதமான பாதிப்பும் ஏற்படவில்லையென தெரிவிக்கப்படுகிறது.

### படையினரின் . .

சிகிச்சைக்குட்படுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இம்மோதலின்போதுகொல்லப்பட்ட நான்கு உயரதிகாரிகளையும் தவிர இரண்டு அதிகாரிகள் உட்பட 35 படையினர் படுகாயமடைந்ததாகவும் மேலும் ஒரு மோதலில் இரு அதிகாரிகள் உட்பட 37 படையினர் சிறுகாயங்களுக்கு இலக்காகியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இம்மோதல் சம்பவங்கள் குறித்து விடுதலைப்புலிகளின் வானொலியான புலிகளின் குரல் வானொலி இரு பவள்கவச வாகனங்கள் தம்மால் சேதமாக்கப்பட்டதாகவும் மேலுமொரு கவசவாகனத்தைத் தாம் கைப்பற்றியதாகவும் தெரிவித்துள்ளது.

படையினரின் சிதறிய சடலங்கள் ஆயுதங்கள் சிதறிக் காணப்பட்டதாகவும் நூற்றிற்கு மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டிருக்கலாமெனவும் அவ்வானொலி தெரிவித்தது.

பெருமெடுப்பில் மேற்கொள்ளப்பட்ட இவ் இராணுவ நடவடிக்கை தம்மால் வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டதாகவும் அவ்வானொலி மேலும் தெரிவித்துள்ளது. (வ-நு)

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரினால் இல, 15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணத் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000 ஆண்டுஏப்ரல் மாதம் 04 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.